இலவச பிரதி
Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

உங்கள் நிறுவனங்களின்
உள்ளக தொலைபேசி
இணைப்புக்களுக்கு...

கிளிநொச்சியில்
அதிக நிறுவனங்களுக்கு
உள்ளகத் தொலைபேசி
இணைப்புக்களை ஏற்படுத்தியவர்கள்.

நொதேன் ரெக்னோலஜி
பிறைவேட் லிமிட்டட்
இல:52, 2ஆம்குறுக்குத்தெரு, வவுனியா.
தொலைபேசி : 024-2221649.
இல: 20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி : 021-2225653(ச-13518)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-09 | 24-12-2005 | சனிக்கிழமை | ஓசை-309

# பேசாலையில் கிளைமோர் தாக்குதல்
# 13 சிறிலங்கா கடற்படையினர் பலி!

## இரு வாகனங்கள் சேதமடைந்தன

(மன்னார்)

**சிறிலங்காக் கடற்படையினரின் வாகனத் தொடரணி பேசாலைப் பகுதியில் கிளைமோர்த் தாக்குதலுக்குள்ளானதில் 13 கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 17 பேர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதலில் இரு வாகனங்கள் சேதமடைந்தன.**

மன்னாரிலிருந்து வடமேற்கில் 15 கிலோமீற்றர் தொலைவில் பேசாலைக்கு அருகில் துள்ளுக்குடியிருப்பு என்ற இடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இச்சம்பவம் நடந்தது.

தலைமன்னார் கடற்படை முகாமிற்கு கடற்படையினர் சென்று கொண்டிருந்த போது இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. படுகாயமடைந்த நான்கு கடற்படையினர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலையில் பொதுமக்களின் வீடுகள் இராணுவத்தினரால் தீவைத்து எரிப்பு!

### மக்கள் இடப்பெயர்வு

(மன்னார்)

மன்னார் பேசாலையில் நேற்றைய தினம் சிறிலங்கா கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் நூறு வீட்டுத் திட்டம் பகுதியிலுள்ள வீடுகளை எரித்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இராணுவத்தின் இம்மிலேச்சத்தனமான செயற்பாடுகளால் எரிகாயங்களுக்கு உள்ளானோர் பேசாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இதில் மேலதிக சிகிச்சைபெற வேண்டிய கடும் காயங்களுக்குள்ளான பலரை மேலதிக சிகிச்சைக்கு கொண்டு செல்வதற்கு நோயாளர் காவு வண்டி இன்மையால் அவர்கள் சிறிய வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெறும் ஆபத்து நிலை காணப்படுகின்றது. (18)

## பொங்கியெழும் மக்கள் படை பேசாலை தாக்குதலுக்கு உரிமைகோரல்

பேசாலையில் சிறிலங்காக்கடற்படையினர் மீதான தாக்குதலுக்கு மன்னார் மாவட்ட பொங்கி எழும் மக்கள் படை உரிமை கோரியுள்ளது.

இது தொடர்பாக மக்கள் படை செய்திக்குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது. இதில் கடந்த 17ஆம் திகதியன்று யாழ் ஊர்காவற்துறையில் சகோதரி தர்சினி கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டதற்கு, யாழ்மாவட்ட பொங்கியெழும் மக்கள் படைக்கு கரம்கொடுக்கும் முகமாக இத்தாக்குதல் ஓர் இறுதி எச்சரிக்கையாக கடற்படையினர் மீது நடாத்தப்பட்டுள்ளது. இனிவரும் காலத்தில் எமது தமிழ்மக்கள் மீது பிரயோகிக்கப்படும் இராணுவ அட்டூழியங்களுக்கு இது போன்ற பாரிய அழிவுகளை சிறிலங்காப்படைகள் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறிலங்காப் பாதுகாப்புச் சபையை அவசரமாகக் கூட்டினார் மகிந்த!

(கொழும்பு)

சிறிலங்கா தேசிய பாதுகாப்புச் சபையின் அவசர கூட்டத்துக்கு சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.மன்னார் பேசாலை கிளைமோர்த்தாக்குதல் சம்பவத்தையடுத்து இந்தக் கூட்டத்திற்கு மகிந்த ஏற்பாடு செய்துள்ளார். யாழ் மற்றும் மன்னார் சம்பவங்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படக் கூடும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.இதுதொடர்பில் முப்படையினருக்கும் பொலிசாருக்கும்முக்கிய உத்தரவுகளை மகிந்த பிறப்பிக்கக் கூடும் என்றும் அச் செய்திகள் கூறுகின்றன.

## முறிப்புக்குளம் பகுதியில் இளம் பெண் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முறிப்புக்குளம் பகுதியிலிருந்து இளம்பெண்ணொருவரின் சடலம் தமிழீழ காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளது. நேற்று தமிழீழ காவல்துறையின் கிளிநொச்சி பணிமனையினருக்குக் கிடைத்த தகவலைப்படுத்து ஸ்தலத்திற்கு விரைந்த காவல்துறையினர் இவ் இளம் பெண்ணின் சடலத்தை மீட்டனர். ஒரு வாரத்திற்கு முன் இறந்திருக்கலாம் எனக் கருதக்கூடியளவில் இச்சடலம் உருக்குலைந்துள்ளதெனத் தெரியவருகிறது. இது பற்றிய மேலதிக விபரங்களை அறியவிரும்புவோர் கிளிநொச்சி காவல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ காவல்துறையினர் கேட்டுள்ளனர். (ச)

## குளப்பிட்டியில் தாக்குதல் இரு படையினர் பலி?

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரை இலக்கு வைத்து யாழ். கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் நேற்று அடையாளம் தெரியாதோரினால் நடத்தப்பட்ட தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டுள்ளதாக இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

குளப்பிட்டிச் சந்தியில் நின்றிருந்த படையினர் மீது அடையாளம் தெரியாத நபர்களினால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இதன்போது இரு படையினர் கொல்லப்பட்டனர் என அது தெரிவிக்கின்றது.மேலதிக விபரங்கள் தெரியவரவில்லை.

## கைக்குண்டு வீச்சில் சிப்பாய் படுகாயம் மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்

### சாவகச்சேரியில் நேற்று சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு சமீபமாக உள்ள இராணுவ காவலரண் ஒன்றின் மீது நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

இக்கைக்குண்டுத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார். இதனையடுத்து இராணுவம் பொதுமக்களைக் கண்டபடி தாக்கியதுடன் கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகத்தையும் நடத்தியது. இதில் இரு பொதுமக்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்

(14ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பொதுமக்கள் மீது படையினர் பரவலாகத் தாக்குதல்

### ஈருருளிகளின் செயின்,பொல்லுகள்,வயர்களுடன் நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பொது மக்கள் பரவலாக இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். நேற்று காலையில் யாழ். செயலகத்திற்கு சென்ற யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் வீட்டு உதவியாளர், நல்லூர் பிரதேச செயலக வாகனச் சாரதி க. அருட்செல்வன், அலுவலக ஊழியர் க.மயூரன் உட்பட சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் நல்லூர் சட்டநாதர் ஆலயத்திற்கும் மற்றும் கல்வியங்காட்டுச் சந்தைக்கும் இடையில் வைத்து தாக்கப்பட்டுள்ளார்கள். இதேநேரம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மற்றும் தென்மராட்சிப்பகுதியிலும் இராணுவத்தினர் பொதுமக்களைத்தாக்கியுள்ளார்கள். இராணுவத்தின் இத்தகைய செயற்பாடுகள் காரணமாக யாழ் குடாநாட்டில் பரவலாக பெரும் பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அனைத்து இராணுவத்தினரும் தமது கைகளில் துப்பாக்கிகள் ஏந்தியுள்ளதுடன் மேலதிகமாக ஈருருளிகளின் செயின், பொல்லுகள், வயர்கள் ஆகியனவும் தாங்கி நிற்கின்றார்கள்.

(41)

## இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்கள் இன்று புலிகளுடன் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் இன்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்திக்கவுள்ளனர். இன்று காலை தரைவழியாக கிளிநொச்சியை வந்தடையும் அவர்கள் முற்பகல் 11 மணியளவில் அரசியல்துறை பொறுப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடவிருக்கின்றனர்.

நோர்வே, யப்பான், ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா ஆகிய நாடுகளின் தூதுவர்களே இச்சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மாணவன், ஊடகவியலாளர் படையினரால் தாக்கு!

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தால் மாணவர் ஒருவரும் பத்திரிகைச் செய்தியாளர் ஒருவரும் தாக்கப்பட்டுள்ளனர்.

நேற்று கலிகைச் சந்தியில் வைத்து பொதுமக்களின் உடமை

(14ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**Microsoft Front Page**
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
வின்நெற் கணனிபயிற்சி நிலையம்
டிப்போவீதி, கிளிநொச்சி.
*(சி-13074)*

## விற்பனைக்குண்டு

5ஆம் கட்டை, அளம்பில் முல்லைத்தீவில் 49 ஏக்கர் தென்னந் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- காந்திமதி சிதம்பரப்பிள்ளை மே/பா. சி.சிவசுப்பிரமணியம் 5ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு. (6967)


## சாவு அறிவித்தல்

### பொன்னம்பலம் சின்னத்துரை





சிலாவத்தை முல்லைத்தீவை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் சின்னத்துரை என்பவர் 22.12.2005(வியாழக்கிழமை) காலமாகிவிட்டார். இவர் குமுளமுனையைச் சேர்ந்த பொன்னம்பலம் கனகம்மா தம்பதிகளின் மூத்த மகனும், சிலாவத்தையைச் சேர்ந்த கந்தையா பார்வதி தம்பதிகளின் மருமகனும், சிவகெங்கையின் அன்புக் கணவரும், ரகுநாதன் (சிலாவத்தை), ரமணி (நோர்வே), சியாமளா(சிலாவத்தை), ஜெனவநாதன் (லண்டன்), ஜீவகலா (சிலாவத்தை), சுரேஸ்நாதன் (சிலாவத்தை-முத்து ஐயன் கட்டு வலது கரை அ.த.க பாடசாலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும். மோகனதாஸ் (நோர்வே), உலகநாயகி(சிலாவத்தை), சந்திரராசா (சிலாவத்தை), சிவபாக்கியம் (லண்டன்), கணேசலிங்கம் (அப்பன்-சிலாவத்தை), மஞ்சுளாதேவி (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜேந்திரன், லோஜனா, துஸ்யந்தன், அஞ்சனா-(நோர்வே), சுமித்திரா, டினேஸ், லோஜிகா, லிக்சிகா-(சிலாவத்தை), பிந்துஷா,டினோஷா, சஞ்சீவன்-(சிலாவத்தை), அஜந்தன், ஆரணி-(லண்டன்), துஜீவன், கஜீவா-(சிலாவத்தை) ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார். இவரது ஈமைக்கிரியைகள் 23.12.2005 (வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் சிலாவத்தையில் அமைந்துள்ள இவரது இல்லத்தில் நடைபெற்று சிலாவத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத் தருகின்றோம்

தகவல்:-
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி.13621)

## கரைதுறைப்பற்று பிரதேசசபை முல்லைத்தீவு

### மீள்கேள்வி அறிவித்தல்-2006

கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குத்தகைக்கு அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் என்னால் 28.12.2005 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஆகக்கூடிய கேள்வித் தொகையின் பிரகாரம் குத்தகைக்கானவர்கள் தெரிவு செய்யப்படும்.

கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 500 உம் கேள்விவைப்புப் பணமாக ரூபா 1000 உம் செலுத்தி 28.12.2005 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கேள்விப்படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 28.12.2005 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்குத் திறக்கப்படும் சித்தியடையும். கேள்விக்காரர் உடனடியாக கேள்வியில் 1/3 பங்கை பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்தி சபையின் நிபந்தைனைக்கு ஏற்ப ஒப்பந்தம் செய்துகொள்ளப்படல் வேண்டும். கேள்வித் தொகையின் மீதிப்பணத்தை 8 சம பங்குகளாக பிரித்து சனவரி முதல் ஓகஸ்ட் வரை மாதாந்தம் செலுத்தப்படல் வேண்டும்.

கடந்த கால கேள்விகள் மூலம் சபைக்கு வருமதியான நிலுவைகளை செலுத்த தவறியவர்கள் குத்தகை கேள்விக்கு பங்குபற்ற அருகதையற்றவர்கள் ஆவர்.

கேள்வியை முழுமையாகவோ, பகுதியாகவோ, ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ விசேட ஆணையாளருக்கு/ செயலாளருக்கு அதிகாரம் உண்டு. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்படிவங்களை இந்த அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத் தபாலிலோ சேர்ப்பித்தல் வேண்டும். அதன் ஒரு பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரங்கள் | மாதவாடகை | காலப்பகுதி | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| **முள்ளியவளைஉபஅலுவலகம்** | | | | |
| 01 | முள்ளியவளை சந்தைக் கடை இல01 | 250 | 01.01.2006 முதல் 31.12.2006 வரை | ரூ 5000/= |
| 02 | முள்ளியவளை சந்தைக் கடை இல02 | 250 | " " | ரூ 9700/= |
| 03 | முள்ளியவளை சந்தைக் கடை இல03 | 250 | " " | ரூ 9700/= |
| 04 | தண்ணீரூற்று சந்தைக் கடை இல01 | 250 | " " | ரூ 16000/= |
| 05 | தண்ணீரூற்று சந்தைக் கடை இல02 | 250 | " " | ரூ 16000/= |
| 06 | தண்ணீரூற்று சந்தைக் கடை இல03 | 250 | " " | ரூ 16000/= |
| 07 | தண்ணீரூற்று சந்தைக் கடை இல04 | 250 | " " | ரூ 16000/= |
| **முள்ளிவாய்க்கால்உபஅலுவலகம்** | | | | |
| 01 | முள்ளிவாய்க்கால் சந்தை | - | " " | ரூ 18000/= |
| 02 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 250 | " " | ரூ 28050/= |
| 03 | மாத்தளன் ஆட்டிறைச்சிக்கடை | 250 | " " | ரூ 7300/= |

01 தங்களால் கோரப்படும் கேள்வித் தொகைகள், கேள்விப்பத்திர பணங்கள் மற்றும் கடை வாடகை, மாத வாடகை ஆகியவற்றிற்கு வற்வரி **15%** புறம்பாக செலுத்தப்படல் வேண்டும்.

02 சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக் கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் **3%** இற்கு மேல் சந்தை வரி அறவிடக்கூடாது என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

(திரு.இ.கிருஷ்ணபிள்ளை)
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு

(சி.13617)


தமிழர் திருநாளாம் உழவர் பெருநாளை முன்னிட்டு
நிதித்துறையின் பொங்கல் விழா ஏற்பாட்டுக் குழுவினர் நடாத்தும்



## மாபெரும் மாட்டு வண்டி ஓட்டுகைப் போட்டி

**2006-01-12**

இடம்:-விசுவமடு தொட்டியடி ஓட்டுகைத் திடல்

நேரம்:- பி.ப 01.00 மணி

போட்டியிற் பங்குகொள்ளும் காளைக் குழுக்கள்
அ,ஆ,இ,ஈ
என நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளன



**வெற்றி பெறும் குழுக்களுக்கு**
**பெறுமதிமிக்க பணப் பரிசில்கள் வழங்கப்படும்**

"தமிழரின் பண்பாட்டை உலகெங்கும் பறைசாற்றும் போட்டிகளிலொன்றான மாட்டு வண்டி ஓட்டுகைப் போட்டியிற் காளைகளின் வீரமும் காளைகளை வழிநடத்துவோரின் திறமும் காண வாரீர்"







**பல்வேறு நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் போட்டிகளைத் தொலைக்காட்சியிற் கண்டு மகிழலாம்**

"எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர்
எமது இனத்தின் ஆன்மா"
*தமிழீழ தேசியத் தலைவர்*

விழாஏற்பாட்டுக்குழு:-
நிதித்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்

**அனைவரும் வாரீர்; பண்பாட்டில் நனைவோம் பாரினில் நிமிர்வோம்**

(சி.13619)

## யப்பானில் கடுமையான பனி



(டோக்கியோ)

யப்பான் நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு கடுமையான பனி பெய்து வருகிறது. பனி அதிகமானதால் பல இடங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அதிவேக புகையிரதம் உட்பட ஏராளமான புகையிரதங்கள் சேவையில் ஈடுபடாததால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆறு இலட்சத்துக்கும் மேற்பட்ட வீடு மற்றும் தொழில் நிறுவனங்களில் மின்சாரம் இல்லாமல் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

# ஈராக்கில் சோதனைச் சாவடி மீது தாக்குதல்; எட்டுப் படையினர் பலி; 17 பேர் காயம்

(பாக்தாத்)

**ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு வடக்கே 70 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் எட்டு ஈராக்கிய இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். 17பேர் காயமடைந்துள்ளனர்.**

நேற்றுக்காலை இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாக்தாத்திற்கும் வடநகரான கிரிக்போர் நகரத்திற்குமிடையே அமைந்துள்ள வீதிச்சோதனைச் சாவடி மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்தவாரம் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற பின்னர் அதிகபடையினரை பலிகொண்ட தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினருக்கு எதிராகவும் மற்றும் ஈராக்கிய படையினருக்கு எதிராகவும் தொடர்ச்சியான தாக்குதல்கள் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆண்களிடமிருந்து அதிகாரத்தைப் பறித்த பெண்கள்

குரோஷிய நாட்டில் ஆண்களிடம் இருந்து அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான இயக்கத்தில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஊராட்சித் தேர்தலில் மொத்தமுள்ள ஏழு இடங்களுக்கும் பெண்களே போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளனர்.

ஆண்கள் இனி ஆட்சி அதிகாரத்துக்கு வர முடியாது. அவர்களை இனி அரசியலில் அனுமதிக்கமாட்டோம் என்று பெண்கள் கூறியுள்ளனர். ஆட்சி அதிகாரங்களில் இருந்த ஆண்கள் சமூகத்திற்கு பயனளிக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லை என்பதைச் சுட்டிக்காட்டியே பெண்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோருக்கு அமெரிக்க நீதிமன்றம் எச்சரிக்கை

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க்கில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள போக்குவரத்து தொழிற்சங்க நிர்வாகிகளுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று நீதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் கடந்த மூன்று நாட்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். மொத்தம் 34ஆயிரம் தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் பங்கேற்றுள்ளனர்.


இதன்காரணமாக நகரில் பேருந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் ஓய்வூதிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது. போராட்டத்தினால் 70இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நியூயோர்க் நகர சட்டப்படி பொதுத்துறை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபடக்கூடாது இதைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கத்தினருக்கு நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நெருக்கடி அதிகரித்ததைத் தொடர்ந்து தொழிற்சங்கத்தினர் தங்களது நிலையில் இருந்து இறங்கி வரத்தொடங்கி உள்ளனர். ஓய்வூதிய நிபந்தனை தளர்த்தப்பட்டால் போராட்டத்தை விலக்கிக் கொள்வதாக அறிவித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்க தலைவர்களுக்கு முதல் பத்து இலட்சம் டொலர் அபராதம் விதித்தது. நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து தொழிற்சங்கத் தலைவர்கள் நீதிமன்றில் ஆஜரானார்கள். அப்போது போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வராவிட்டால் தொழிற்சங்கத்தினருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்போவதாக நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

## இன்சாட் - 4ஏ விண்ணில் செலுத்தப்பட்டது



(புதுடில்லி)

இந்திய செயற்கை கோளான இன்சாட்-4ஏ நேற்று முன்தினம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

பெங்களூரில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு இன்சாட்-4ஏ செயற்கை கோளை வடிவமைத்துள்ளது இதற்கு ரூ.350 கோடி செலவு செய்யப்பட்டது. இந்திய செயற்கை கோள்களிலேயே இது கனமானது ஆகும். இதன் எடை 3,086 கிலோகிராம்.

இந்த செயற்கை கோள்.நேற்று முன்தினம் அதிகாலை தென் அமெரிக்காவின் பிரெஞ்ச் கயானாவில் உள்ள கோரு விண்வெளித் தளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

அடுத்த மாத இறுதிக்குள் இன்சாட்-4ஏ தனது செயற்பாட்டை தொடங்கும்.இதன் ஆயுட்காலம் 12 ஆண்டுகள் ஆகும்.

## இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய காலடிச் சுவடுகள் கண்டுபிடிப்பு

இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதனின் காலடிச் சுவடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தின் அகழ்வு ஆராய்ச்சி துறை நிபுணர்கள் சிட்னி அருகே உள்ள விலாண்ட்ரா ஏரிக்கரைப் பகுதியில் ஆய்வு நடத்தினார்கள். அப்போது பழங்கால மனிதர்களின் காலடிச் சுவடுகளை இவர்கள் கண்டு பிடித்தனர். இந்த காலடிச் சுவடுகள் 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதனின் காலடிச் சுவடுகள் என்றும் தெரியவந்துள்ளது.

கங்காருவை அவர்கள் வேட்டையாட பயன்படுத்திய ஆயுதங்களின் படிமங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## சந்திப்பு



அமெரிக்கா சென்றுள்ள இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலிசா றைசை சந்தித்துப் பேசினார்.

# ஈராக்போரை தடுத்துநிறுத்த முடியாதது பெரும் வருத்தம் அளிக்கிறது - கொபிஅனான்

ஈராக் போரைத் தடுத்து நிறுத்த முடியாதது பெரும் வருத்தம்அளிக்கிறது என ஐ.நா.பொதுச் செயலர் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.பொதுச் செயலர் கொபி அனான் அடுத்த ஆண்டு இறுதியில் ஓய்வு பெறுகிறார். இந்த ஆண்டுக்கான இறுதிப் பத்திரிகையாளர்கள் கூட்டத்தை நடத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.நா.சபை உலகளவில் பல நல்ல செயல்களை மேற்கொண்டுள்ளது. ஆனால் ஈராக் போரைத் தடுத்து நிறுத்த முடியாதது பெரும் வருத்தத்தை அளிக்கிறது. இது ஐ.நா. சபையில் பிளவை ஏற்படுத்திவிட்டது. சர்வதேச சமூகமாக ஐ.நா.சபை விளங்குகிறது. அந்தப்போரை நாம் தடுத்து நிறுத்தியிருந்தால் அனைவருக்கும் நல்ல பலனை அளித்திருக்கும்.அதிகாரம் மிக்க 15 உறுப்பினர்கள் கொண்ட பாதுகாப்புக் குழுவை விரிவுபடுத்த வேண்டியது மிக அவசியமானதொன்று. தற்போதைய மாறுதல்களுக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்காமல்இருந்தால் பாதுகாப்புக்குழு மேற்கொள்ளும் சீர்திருத்தங்களுக்கு பலன் கிடைக்காமல் போய்விடும்.

நடந்து முடிந்த ஆண்டில் பல பகுதிகளில்தீவிரவாதத் தாக்குதல்கள் நடந்துள்ளன.வளைகுடா பகுதி ஈராக்கில் நடக்கும் தாக்குதல்கள், பாலஸ்தீன -இஸ்ரேல் மோதல் லெபனானில் நடந்த அரசியல் கொலைகள் ஆகியவை முக்கியமான சம்பவங்களாக அமைந்துள்ளன.



வரும் ஆண்டில் வறுமை ஒழிப்பு, அமைதியை நிலை நாட்டுவது, சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் காட்டும் உறுதி ஆகிய விடயங்களில் ஐ.நா. சபை கவனம் செலுத்தும் உறுப்பு நாடுகளிடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை போக்குவதிலேயே கூடுதல் ஈடுபாடு காட்ட வேண்டியிருக்கும்.

வோல்கர் குழு அறிக்கையை பரிசீலனை செய்ததன் மூலம் ஐ.நா. சபை சரியான பாடங்களை கற்றுள்ளது. தவறு நடந்த விடயங்களை சரிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.அடுத்த ஐ.நா.பொதுச்செயலராக ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த ஒருவர் வருவதை சில நாடுகள் ஏற்றுக் கொள்ளவில்லை. கடந்த காலங்களில் சுழற்சி முறையிலேயே இப்பதவி நிரப்பப்பட்டு வருகிறது. அதன்படி அடுத்த ஐ.நா.பொதுச்செயலராக ஆசியாவைச் சேர்ந்த ஒருவரே வரவேண்டும் என்பதே பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் மற்றும் எனது கருத்தாக உள்ளது என கொபி அனான் கூறினார்.

## பாகிஸ்தான் - அமெரிக்க உறவுகளை நீண்ட கால அடிப்படையில் பலப்படுத்த தீர்மானம்

(கராச்சி)

பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஸ் முஸாரப்பும் அமெரிக்க உப சனாதிபதியும் பாகிஸ்தான், அமெரிக்க உறவுகளை நீண்டகால அடிப்படையில் மேலும் வலுப்படுத்த உறுதியான தீர்மானத்திற்கு வந்துள்ளனர்.

அல்வான் ஈசதாரில் இடம்பெற்ற கூட்டத்தில் இருதரப்பு அரசியல் மற்றும் பொருளாதார உறவுகள் குறித்து இரு தலைவர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். பரஸ்பாமுறையில் பிராந்திய மற்றும் சர்வதேச விடயங்கள் குறித்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் எட்டாம் திகதி ஏற்பட்ட பூகம்ப அனர்த்தத்தை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு தமது நாடு வழங்கிய ஒத்துழைப்புக் குறித்து விளக்கிய அமெரிக்க உபசனாதிபதி பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைக்க வோஷிங்டன் உதவி வழங்குமென்று கூறினர்.

அமெரிக்கா வழங்கிய இந்த உதவிக்கு பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ்முஷாரப் நன்றி தெரிவித்தார்.

# அவுஸ்திரேலிய சுற்றுலாப் பயணிகள் ஏமன் தலைநகரில் கடத்தல்

(சனா)

ஏமன் நாட்டில் இரண்டு சுற்றுலாப் பயணிகள் ஆதிவாசிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இந்தச் சுற்றுலாப்பயணிகள் ஏமன்நாட்டுத் தலைநகர் சனாவிற்கு கிழக்கில் இருக்கும் மலைப்பிரதேசத்திற்குச் சென்றிருந்தபோது ஆயுதம் தாங்கிய ஆதிவாசிக் கும்பல் கடத்திச் சென்றது. பாதுகாப்புப் படையின் அந்தப் பகுதியை முற்றுகையிட்டு இருவரையும் மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மாதம் இதே போன்று சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த இரண்டு பேர் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஆதிவாசித் தலைவரின் சகோதரரை சிறையில் இருந்து விடுதலை செய்ய அதிகாரிகள் சம்மதம் தெரிவித்ததன் பேரில் அந்த இரண்டு பேரும் விடுவிக்கப்பட்டனர். தற்போது இரண்டு பேரையும் எதற்காகக் கடத்திச் சென்றுள்ளனர் என்ற விபரம் தெரியவரவில்லை.

## கன்னியாஸ்திரிகள் போராட்டம்

(பீஜிங்)

சீனாவில் பீஜிங்கில் கன்னியாஸ்திரிகள் போராட்டம் நடாத்தி வருகின்றனர். கன்னியாஸ்திரிகள் வசித்துவந்த மிகப் பழமைவாய்ந்த கட்டடத்தினை அந்நாட்டு அரசு கைப்பற்றியுள்ளது. இதனையடுத்து கன்னியாஸ்திரிகளை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளது. இதனையடுத்து கன்னியாஸ்திரிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# பாராளுமன்றத்தில் பலம்மிக்க ஒரே அணியாக செயற்படுவது பற்றி கலந்துரையாடினோம்

## -மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன்

(அலுவலக செய்தியாளர்)

**தமிழ் மக்களைக் கைதுசெய்வதற்கும், துன்புறுத்துவதற்காகவுமே அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் நீடித்து வருகின்றது. இது தமிழ் மக்களின் அவமானச்சின்னம். அனைத்து தமிழ்க்கட்சிகளும் ஒன்றிணைந்து இதற்கெதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு திட்டங்களைத் தீட்டி வருகிறோம். இவ்வாறு மேலக மக்கள் முன்னணித்தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது;

**கேள்வி:-** இன்றைய சந்திப்புத் தொடர்பாக?

☐ இச் சந்திப்பு காத்திரமாகவும், சிறப்பாகவும் நடைபெற்றது. புதிதாக பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பற்றிய பார்வை எப்படியுள்ளது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக எமது பயணம் அமைந்திருந்தது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உத்தேச பேச்சுவார்த்தையானது தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாக வைத்து அதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடைபெறும் என்பதை தமிழ்ச்செல்வன் எமக்குத் தெளிவுபடுத்தியிருந்தார்.

தமிழீழவிடுதலைப்புலிகள் ஒரு தேசிய விடுதலை இயக்கம். வடக்கு-கிழக்கு சார்ந்த தமிழ்தேசியக் கூட்டமைப்பு என்று செயற்பட்டுக்கொண்டிருக்கும் கட்சிகள், இதைத் தவிர வடக்கு-கிழக்குக்கு வெளியே எங்களின் மேலக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய அனைத்துக் கட்சிகளும் ஒருசேர செயற்பட்டு சிறிலங்கா பாராளுமன்றத்திலேயே ஒருபலம் மிக்க அரசியல் பேரம் பேசக்கூடிய அணியாகச் செயற்பட வேண்டும் என்ற அடிப்படையில் இன்றைய கலந்துரையாடல் அமைந்திருந்தது.

இன்றைய சூழ்நிலையிலே சமீபத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர் தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்துள்ள முழக்கங்களின் அடிப்படையில் எங்கள் அனைவருடனும் இணைந்து செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம். அதற்கான கோரிக்கையும் விடுக்க விரும்புகிறேன்.

**கேள்வி:** அவசரகாலச்சட்டம் தொடர்பாக தங்களின் நிலைப்பாடு என்ன?

☐ அவசரகாலச்சட்டம் என்பது தமிழ்மக்களின் அவமானச் சின்னம். அச்சட்டத்தின் அடிப்படையில் வரக்கூடிய பலத்தை வைத்துக் கொண்டுதான் சிங்கள இராணுவமும், பொலிசாரும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்திலேயே நடை பெறக்கூடிய கள நிலைமைகள் வேறு. வடக்கு-கிழக்கு வெளியே சிறிலங்காவின் தலைநகர்ப்பகுதியிலே எங்களது மேலகப் பகுதிகளிலேயே வாழக்கூடிய தமிழ்மக்களை இந்த அவசரகாலச் சட்டத்தை வைத்துக் கொண்டுதான் சிறிலங்கா பொலிசார், இராணுவத்தினர் பல்வேறு கெடுபிடிகளுக்கும், தொந்தரவுகளுக்கும், சர்ச்சைகளுக்கும் உள்ளாக்கிக்கொண்டு இருக்கின்றார்கள்.

வீடு,வீடாக தேடுதல் நடத்தி எந்தவித குற்றச் செயல்களும் செய்யாத தமிழ் மக்களை கைது செய்வது சோதனை செய்து பொலிஸ் நிலையங்களில் அடைத்து வைப்பது தனிப்பட்ட குடும்ப விபரங்களைக்கூட எழுத்து மூலமாகப் பதிவு செய்து தரவேண்டும் என்று பல்வேறு இன்னல்களுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

**கேள்வி** ஆறுமுகன் தொண்டமான் தங்களுடன் இணைந்து செயற்படத் தொடர்பு கொண்டாரா?

☐ ஆறுமுகன் தொண்டமான் என்னிடம் இதுவரை பேசவில்லை. அவர்களது கட்சியைச் சேர்ந்த சிலர் எமது கட்சியின் சிலருடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்ற சில நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளன. காத்திரமான எந்தச் செயற்பாடுகளும் நடைபெறவில்லை.

எம்மைப் பொறுத்த வரையில் அரசியல் ரீதியில் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

ஆறுமுகன் தொண்டமானின் கட்சிதான் பழைய நிலைப்பாடுகளை மாற்றி புதிய நிலைப்பாட்டுக்குவரவேண்டும்.

**கேள்வி:** இதில் ஏதாவது அரசியல் சந்தர்ப்பவாதம் உள்ளது எனக் கருதுகிறீர்களா?

☐ இக்கேள்விக்கான பதில் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆறுமுகன் தொண்டமான் உறுதியளித்த படி அவரும் அவரது கட்சியும் விசுவாசமாக தமிழ் தேசிய சிந்தனையுடன் செயற்படுமா என்பதைக் காலம் காட்டும். பொறுத்திருந்து பாருங்கள் என்றார். (லோ)

# மன்னாரில் கடற்படையினரால் 4 சிறுவர்கள் உட்பட 9பேர் கைது

மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையினரின் இரு படகுகள் தாக்குதலுக்குள்ளானதை அடுத்து பள்ளிமுனை, பசார் மற்றும் சின்னக்கடை, உப்புக்குளம் ஆகிய பகுதிகளைச்சுற்றி வளைத்த சிறிலங்காப் படையினர் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்திப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு வர்த்தக நிலையங்களும் தாக்கப்பட்டுள்ளன. அத்துடன் பள்ளிமுனைக்கடற்கரையில் வைத்து ஒன்பது மீனவர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பள்ளிமுனையைச்சேர்ந்தவர்களாவர். சூசைஅப்பு சன்சிலாஸ் (வயது-11) சூசைஅப்பு அன்ரன் (வயது-15) கலிஸ்ராஸ் இக்கிராடோ(வயது-15)செபஸ்தியான் அந்தோணி றொபேட் (வயது-17) இம்மானுவேல் ஜோர்ஆரோக்கியநாதன் (வயது-18) சிறிஸ்கந்தராஜா கொன்சிலாஸ் (வயது-27) எஸ்.சில்வெஸ்ரர் (வயது-50) ஜோசெப் கிறிஸ்துராஜா (வயது-51) மற்றும் ஒருவருமாக ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை பள்ளிமுனை கடற்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை தொழிலுக்குச்சென்ற எட்டுப்படகுகள் கரைதிரும்பவில்லை என உறவினர்கள் கூறியுள்ளனர்.

# மின் இணைப்பு பயிற்சி நெறி

ஓ.ஜி.ஆர் நிறுவனத்தின் அனுசரணையுடன் மின் இணைப்பு பயிற்சிநெறி முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது. இப்பயிற்சிநெறி இம்மாதம் ஆறாம் திகதியிலிருந்து நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் 20 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (20)



**பிரதான வீதிகளில் மக்கள் கடவைகளை துலக்கமாக வெளிப்படுத்தும் வகையில் மஞ்சள் தீந்தைகள் பூசப்பட்டு வருவதை படத்தில் காணலாம். (படம் சோதி)**

# தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா இராணுவத்தின் அனைத்து வன்முறைகளையும் உடன் தடுத்து நிறுத்த வேண்டும்!

## கிளி.பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் தாயகத்தில் சிறிலங்கா பேரினவாதத்தினதும் அதன் ஒட்டுப்படைகளினதும் அராஜக செயல்களின் வெளிப்பாடாக அண்மைய நாட்களாக நடைபெற்று வரும் இராணுவ அடாவடித்தனங்களை சர்வதேச சமூகத்திற்கும் தங்களுக்கும் தெரியப்படுத்துகிறோம். இவ்வாறு கிளி. மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிற்கு கையளித்துள்ள மகஜரில் தெரிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

யாழ். புங்குடுதீவில் தர்சினி எனும் இளம் யுவதி மிகவும் கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவமானது இராணுவத்தின் பாலியல் வக்கிரகங்களை மீண்டும் ஒருமுறை நிருபிப்பதாக அமைந்துள்ளது. தென் தமிழீழத்தில் தமிழ் முஸ்லிம் உறவை திட்டமிட்ட முறையில் சீர்குலைக்கும் நோக்குடன் சிறிலங்காவின் இராணுவப் புலனாய்வுத்துறையினரும் அவர்களோடு சேர்ந்து இயங்கும் ஒட்டுப்படைகளும் தொடர்சியான கொலைகள் வன்முறை களை. மேற்கொண்டு யுத்தநிறுத்தத்தை கேள்விக்குறியாக்கியுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் உயர் கல்வி நிறுவனமான யாழ் பல்கலைகழகம் இராணுவ நெருக்குவாரங்களுக்கு உள்ளாகியுள்ளது. கல்வியாளர்கள், துணைவேந்தர், பேராசிரியர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடக வியலாளர்கள், மாணவர்கள்,பொது மக்கள் என தாக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பல முச்சக்கர வண்டிகள் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.சிங்கள இராணுவம் புரிந்திருக்கும் பகிரங்க யுத்த நிறுத்த மீறல்களை சர்வதேச சமூகமும் தாங்களும் கண்டிக்கவோ, சீர்செய்யவோ எத்தகைய முனைப்புக்களையும் வெளிக்காட்ட முடியாது இருப்பது எம்மை மேலும் விரக்திக்குள்ளாக்கியுள்ளது. இந்நிலை தொடர்கின்ற நிலையில் தமிழ்பேசும் மக்களாகிய நாம் சர்வதேசம் மீது வைத்திருந்த நம்பிக்கையினை இழந்து வருகின்றோம். என்பதனை தங்களது உயரிய கவனத்திற்கு தருகின்றோம். சர்வதேச சமூகம் முன்னிலையிலேயே இத்தகைய அடாவடித் தனங்களும் உரிமை மறுப்புக்களும் நிகழ்வதனை சர்வதேச சமூகமும் உணர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய பொறுப்பு வாய்ந்த பணியை தங்களால் காத்திரமாக ஆற்றமுடியாத சந்தர்ப்பமாக இவ்வேளை அமைந்தால் நாம் போராடி உரிமையைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் நெருங்கி வருவதாகவே உணர்கின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு.தீ)

# எமது பாதுகாப்பை நாமே கையிலெடுத்துப் போராடவேண்டிய கட்டாயம் அனைத்து தமிழ்ப் பெண்களுக்கும் ஏற்பட்டுள்ளது

## கிளி. பெண்கள் மேம்பாட்டுப் பேரவை அறிக்கை

(அலுவலக செய்தியாளர்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்பு இராணுவத்தினரின் பாலியல் பசிக்கு இரையான சகோதரி இளையதம்பி தர்சினியின் சம்பவம் தமிழ்ப் பெண்கள் அனைவருக்கும் கடும் விசனத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பேரவைவிடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் தமிழ்ப் பெண்களின் மீது வயது வேறுபாடின்றி பாலியல் துன்புறுத்தல்களும், பாலியல் வன்முறைகளும் தொடர்ச்சியாக நடந்த வண்ணமேயுள்ளன. அதிலே அண்மையில் பலிகொள்ளப்பட்டவர் இளையதம்பி தர்சினி. 1958ஆம் ஆண்டு தமிழ்ப்பெண்களின் மார்பிலே இரும்புச் சூட்டுக்கோலால் சிங்கள சிறி எழுத்து பொறிக்கப்பட்ட கொடூரம் நடந்தேறியது. 1983ஆம் ஆண்டு இனக்கலவரமென்ற பெயரில் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கையில் 600 பெண்கள் பாலியல் வல்லுறக்குட்படுத்தப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து தமிழினம் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புப் போரின் போது பெண்களின் மீது பாலியல் வன்முறைகளும், படுகொலைகளும் மேற்கொள்ளப்பட்ட வண்ணமே இருந்து வருகின்றது.

இவ்வாறு பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ள போதும் இப்படியாக வெளியில் வந்த சம்பவங்கள் குறைவானவைதான் வெளியில் வராமல் போன சம்பவங்களே மிக அதிகம். இன்று உலகெங்கும், மனித உரிமைகள் பற்றியும், பெண்களின் உரிமை பற்றியும், அதிகம் பேசப்படுகின்றது. ஆனால் தமிழ்ப்பெண்களுக்கும் தமிழினத்திற்கும் அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதை எவருமே இன்று வரை அதிகம் கண்டுகொள்வதாக தெரியவில்லை. இதனை எவ்வாறு நாம் பொறுத்துக் கொள்ள முடியும்.

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் நடக்கின்ற சம்பவங்கள் மிகவும், மோசமானவை. சிறிலங்காவில் புதிய சனாதிபதி பதவியேற்றுள்ள நிலையில் சமாதான முயற்சிகளைத் தொடரவேண்டுமென சர்வதேச சமூகத்தினர் முனைப்பாக செயற்படுகின்ற இந் நிலையில், சிங்கள பேரினவாத மனோபாவம் கொண்ட ஆட்சியாளர் களின் ஏவற்படைகள் யாழ்ப்பாணத் தில் நடைமுறைப்படுத்தி வரும் பயங்கரவாத நடவடிக்கைகளும், அதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்துகின்ற அவசரகாலச் சட்டமும் மக்களின் இயல்பு வாழ்வை சிதைத்துள்ளது.

தமிழ்ப்பெண்கள் வீட்டினுள் முடங்கிக்கிடப்பவர்கள் இல்லையென்பதை கடந்த கால வரலாறுகளின் மூலமாக உலகம் நன்கறியும். எமது பாதுகாப்பை நாமே கையிலெடுத்துப் போராட வேண்டிய கட்டாயம் அனைத்துத் தமிழ்ப்பெண்களுக்கும் ஏற்பட்டுள்ளது. இளையதம்பி தர்சினி மீதான பாலியல் வல்லுறவையும், அவரின் படுகொலையையும், கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மூலமாக உண்மை நிலைமை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் செல்லப்படவேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு.தீ)

# யாழ்.சாவகச்சேரியில் நேற்று திடீர் சோதனை போக்குவரத்து ஸ்தம்பிதம் இயல்பு வாழ்வு பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். சாவகச்சேரி நகரில் இராணுவம் நேற்றுக்காலை நடத்திய திடீர் சோதனைக்கெடுபிடிகளால் அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.**

நேற்றுக்காலை சாவகச்சேரி நகரில் பெருமெடுப்பில் பவல் கவச வாகனங்கள் மற்றும் துருப்புக்காவி வாகனங்கள் என்பனவற்றில் வந்திறங்கிய இராணுவம் சாவகச்சேரி நகரூடாக செல்லும்கண்டி வீதியால் போக்குவரத்துச் செய்யும் அனைத்து வாகனங்களையும் வழிமறித்து சோதனை செய்தனர்.

இவ்வாறான சோதனைகளின் போது அடையாள அட்டைகளை வைத்திருக்காத இளம் வயதுடையோரை வீடுகளுக்கு திரும்பிச் சென்று அடையாள அட்டைகளை எடுத்து வருமாறு கூறி அச்சுறுத்தியுள்ளனர்.

இது தவிர சாவகச்சேரி சந்தையுள் நுழைந்து அங்கு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரையும் விசாரணை செய்து அவர்களையும் கடும் சோதனைகளுக்கும் விசாரணைகளுக் கும் உட்படுத்தினர்.

இதனால் அங்கு இயல்பு நிலை முற்றாகப் பாதிப்படைந்து காணப்பட்டது. வீதிகளில் மக்களின் நடமாட்டம் வழமைக்குமாறாக குறைந்தே காணப்பட்டது. (33)

# இராணுவ வன்முறைகளுக்கு இந்து மாமன்றம் கண்டனம்

யாழ்ப்பாண இராணுவ வன்முறைகளுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன என்று கூறும் ஓர் அரசாங்கம் இராணுவத்தை இப்படி அத்துமீறி நடக்க அனுமதிப்பது அரசாங்கத்தின் பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கையை தமிழ் மக்கள் நம்ப முடியாத ஒரு நிலையை ஏற்படுத்துகின்றது.

கல்விச் சமூகம் நடத்தும் அமைதிப் பேரணி மீது நடத்தப்படும் இப்படியான வன்முறைச் செயல் மிருகத்தனமானது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

அத்துடன் கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும், பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தமிழர்கள் கைது செய்யப் பட்டமையையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யுத்த நிறுத்தத்தின் பின் குடாநாட்டில் குடியுகவந்த குடும்ப விபரங்களை திரட்டி வரும் படையினர்

இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து சென்று வன்னிப் பகுதியில் வாழ்ந்து விட்டு யாழ். குடாநாட்டில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் மீளக் குடியமரத் திரும்பியுள்ளோரின் குடும்ப விபரங்களைச் சேகரிக்கும் முயற்சிகளில் சிறிலங்காப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். குடாநாட்டில் படையினரது கெடுபிடி நடவடிக்கைகளும், அராஜகங்களும் அதிகரித்துள்ள சூழ்நிலையில் படையினர் மேற்கொண்டு வரும் இந்த குடும்ப விபரச் சேகரிப்பு நடவடிக்கைகள் பொது மக்களை பீதிகொள்ளச் செய்துள்ளது.

வன்னியில் வாழ்ந்து விட்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின் குடாநாட்டில் மீளக் குடியமரத் திரும்பியுள்ள குடும்பங்கள் தொடர்பான விபரங்களைச் சேகரிக்கும் படையினர் அவ்வாறான குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளின் பெயர் விபரங்கள் அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை தனியாகப் பட்டியல் படுத்தியும் வருகின்றனர்.

இத்தகைய நடவடிக்கைகளை படையினர் தீவகம் தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் எனப் பரவலாக மேற்கொண்டு வருகின்றனர். (33)

# சிறிலங்கா அரசுக்கு இந்திய அரசு எந்த இராணுவ உதவிகளையும் வழங்கக் கூடாது

## இந்து ஆலய பரிபாலன சபை ஒன்றியம் அறிக்கை

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கம் எதுவித இராணுவ உதவிகளையும் வழங்க வேண்டாம் என்று யாழ். மாவட்ட இந்து ஆலய பரிபாலன சபைகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். மாவட்ட இந்து ஆலய பரிபாலன சபைகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்:-

சிறிலங்கா படையினரது வலுவை அதிகரிப்பதற்கான தங்களது ஒத்துழைப்பு தமிழின அழிப்புக்கு வழி வகுக்கும்.

சிறிலங்காப் படையினரது பலாலி விமான ஓடு பாதையை விரிவாக்கவும், மேலதிக இராணுவ வளங்களை அளிப்பதற்காகவுமான உடன்படிக்கையை சிறிலங்கா அரசாங்கத்துடன் தாங்கள் மேற்கொள்ளவுள்ளதாக ஊடகங்கள் மூலமாக அறிந்து கொண்டோம்.

இத் தகவலானது இன்னலுறும், தமிழ் மக்களுக்கு பெரும் விசனத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

தற்பொழுது சர்வதேச அனுசரணையாளரின் ஒத்துழைப்புடன் போர் நிறுத்தம் நடைமுறையில் உள்ளது. ஆனால் போர் நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் சிறிலங்கா அரசாங்கத்தினால் முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஆகையால் சிறிலங்கா படைத்தரப்பினரது அடாவடித்தனங்கள் அதிகரிப்பது தான் அண்மைக்கால நிகழ்வுகளாகும். இதனால் தமிழ் மக்களின் சமாதானத்தின் மீதான நம்பிக்கை சிதறடிக்கப்பட்டு விட்டது.

சிறிலங்கா அரசாங்கத்தின் கபடமான போக்குக் காரணமாக சமாதான முன்னெடுப்புகளும் தடைப்பட்டு விட்டன.

தமிழ் மக்கள் தமது அடிப்படை மனித உரிமைகளுக்காக போராடுவது என்பது அவர்களது சுதந்திரமான கௌரவமான, பாதுகாப்பான வாழ்வுடன் சம்பந்தப்பட்டது.

இந்த நிலையில் பலாலி விமான ஓடுபாதை விரிவாக்கத்துக்கான தங்களது ஒத்துழைப்பும், இராணுவ வள உதவிகளும், சிறிலங்கா அரசாங்கத்திற்குக் கிடைப்பதானது தமிழ் மக்களை கவலையடைய வைக்கின்றது.

இந்தியாவுக்கும் இலங்கையில் வாழ்கின்ற மக்களுக்கும் உள்ள உறவுகள் பன்னெடுங் காலமானவை, இந்திய அரசாங்கமும் இந்திய மக்களும் இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களை புறம் தள்ளப் போவதில்லை என்பதே எமது எதிர்பார்ப் பாகும். நாம் இந்தியாவை எமது நேச சக்தியா கவே என்றும் கருதி வருகின்றோம்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமானது இத்தகைய நட்புறவைச் சிதைத்து தமது பேரினவாத மேலாண்மையை நிலை நிறுத்த முயல்கின்றது. மிக விரைவிலேயே தமிழின அழிப்புக்கான அனைத்து முயற்சிகளையும், உச்சக் கட்டத்திற்கு எடுத்துச் செல்வதே சிறிலங்கா அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நாம் இந்திய மக்கள் மீதும் இந்திய அரசாங்கத்தின் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையை உயர் நிலைக்கு கொண்டு செல்ல தாங்கள் உரிய வகையில் செயற்பட்டு தடைப்பட்ட நிரந்தர சமாதானத்திற்கான பாதையை மீண்டும் திறப்பதற்கு சிறிலங்கா அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

சிறிலங்கா பலாலி விமானத் தள விரிவாக்கத்துக்கான உதவிகளையோ இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பையோ வழங்க வேண்டாம் எனவும், தமிழ் மக்களின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசியத் தலைவரின் கால அவகாசத்தை சிங்களம் சமாதானத்துக்கு பயன்படுத்த வேண்டும்

## -திருமுறிகண்டி இளைஞர் சேவை மன்றம் வேண்டுகோள்

தமிழீழ தேசியத் தலைவர் வழங்கியுள்ள கால அவகாசத்தை சிறிலங்கா அரசு சமாதான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அதனால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு சிங்கள அரசும், சர்வதேச சமூகமுமே பதில் கூற வேண்டும் என திருமுறிகண்டி தேசிய இளைஞர் சேவை மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைக்காலமாக சிங்கள பேரினவாத அரசு தமிழர்கள் மீது மீண்டும் இனவன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்கள், கல்விமான்கள், பத்திரிகையாளர்கள், அப்பாவிப் பொது மக்கள் என பெருமளவானோர் அரச படைகளின் துப்பாக்கிச் சூட்டிற்கும் தாக்குதலுக்கும் இலக்காகியுள்ளனர். இச் சம்பவம் மிக அண்மையில் யாழ். குடாநாட்டில் நடைபெற்றுள்ளது.

சிங்கள அரசு தமிழ் மக்களின் தார்மீக உரிமையை ஒருபோதும் அரசியல் தீர்வின் மூலம் வழங்க முன்வர மாட்டாது என்ற உண்மை மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. பேரினவாத அரச பயங்கரவாதத்தின் ஒரு அங்கமாகவே அண்மையில் புங்குடுதீவில் நடைபெற்ற பாலியல் வன்முறை, கொலைச் சம்பவமாகும். இச் சம்பவங்களுக்கு எமது கடுமையான கண்டனத்தை தெரியப்படுத்துகின்றோம்.

எமது தேசியத் தலைவர் அவர்கள் வழங்கிய கால அவகாசத்தை சிங்கள அரசு சமாதான நடவடிக்கைக்கு பயன்படுத்த வேண்டும். அதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அதனால் ஏற்படப் போகும் விளைவுகளுக்கு சிங்கள அரசும், சர்வதேச சமூகமுமே பதில் கூற வேண்டும்.

சிங்கள அரசின் கொடூரச் செயல்களை சர்வதேச சமூகம் கண்டும் காணாதது போல விட்டுள்ளது. அதற்கு எமது இறுதியான வேண்டுகோளை விடுக்கின்றோம். தமிழர் பிரச்சினைக்கு தாமதமின்றி அரசியல் ரீதியில் முடிவு காணாத விடத்து ஆயுதப் போர் வெடிப்பது தவிர்க்க முடியாதது. பதினேழாயிரத்து தொளாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களை ஈய்ந்து தொடரும் எமது விடுதலைப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர நாம் அனைவரும் உறுதி பூண்டுள்ளோம்.

சர்வதேச சமூகம் எமது அரசியல் தேவையை உணர்ந்து எமது விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கத் தவறும்பட்சத்தில் மக்களாகிய நாம் எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் பொருட்டு எமது தேசியத் தலைவரின் கீழ் அணி திரண்டு சிங்களப்படைகளுக்கு எதிரான எமது தாயக விடுதலையின் இறுதிப்போரை ஆரம்பிப்போம் என்பதனை திருமுறிகண்டி பிரதேச தேசிய இளைஞர் சேவைமன்றத்தினராகிய நாம் அறியத்தருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாதகலில் தமது நிலைகளை பலப்படுத்தும் சிறிலங்காப் படையினர்

யாழ். மாதகல் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படையினர் தமது நிலைகளையும், முகாம்களையும் விஸ்தரிப்புச் செய்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக படையினர் மேற்கொண்டு வரும் இந்த விஸ்தரிப்புப் பணிகளால் பொது மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக மாதகல் கடற்கரையோரமாக நிலைகொண்டுள்ள இராணுவம் கடற்கரையோரத்தில் புதிய காவலரண்களையும், பதுங்கு குழிகளையும், நிறுவிவருகின்றது.

இதைவிட மாதகல் வயல்வெளிப் பிரதேசத்திலும், போதி இந்து மயானத்துக்கு செல்லும் வீதி என்பனவற்றிலும் படையினர் புதிய காவலரண்களை நிறுவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (33)

## யாழ். குடாநாட்டில் பாதுகாப்பைப் பலப்படுத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் தலைமையக ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதற்காக மேலதிக பொலிஸ் குழுக்களை வட பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் ரோந்து நடவடிக்கையின் போது இராணுவத்தினரின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படுமெனவும், பொலிஸ் தலைமையக ஊடகப் பேச்சாளர் ஜெயந்த பெரேரா கூறியுள்ளார்.

இதே வேளை அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்களை இராணுவத்தினரே கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாகவும், பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

## அதிகரித்து வரும் இராணுவ அட்டூழியம் குடாநாட்டை விட்டு வெளியேறும் மக்கள்

யாழ். குடாநாட்டில் பொது மக்கள் மீதான இராணுவத்தின் கெடுபிடிகள் அராஜகங்கள், என்பன அதிகரித்துள்ள நிலையில் ஏராளமான குடும்பங்கள் குடாநாட்டை விட்டு இடம்பெயரத் தொடங்கியுள்ளன.

இவ்வாறு இராணுவ அச்சுறுத்தல்கள் கெடுபிடிகள் என்பனவற்றால் இடம்பெயரும் குடும்பம் பாதுகாப்புத் தேடி தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தஞ்சம்புகத் தொடங்கியுள்ளன.


அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் சுற்றி வளைப்புக்கள், தேடுதல்கள், சோதனைக் கெடுபிடிகள், விசாரணைகள் என்பனவற்றை படையினர் மேற்கொள்வது மட்டுமன்றி பொது மக்கள் மீது தாக்குதல்களை நடத்தி இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் இராணுவம் மேற்கொண்டு வருகின்றது. இதனையடுத்து குடாநாட்டில் வாழும் பொது மக்கள் மீது இராணுவ வன்முறைகள் மேலோங்கி வருவதன் விளைவாக இங்கு ஏற்பட்டுள்ள யுத்த பீதி காரணமாகவே இவ்வாறு பெருமளவான குடும்பங்கள் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்து வருகின்றன. (33)


# செவ்வாயில் உயிரினங்கள் பிரித்தானிய விஞ்ஞானிகளின் ஆய்வு


பிரித்தானிய விஞ்ஞானிகள் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பிய பீகிள்2 என்ற ஆய்வுக்கலம் செவ்வாய் கிரகத்தைப் படம் பிடித்து புவிக்கு அனுப்பியுள்ளது. இந்தக் கலம் செவ்வாய்க்கிரகத்துக்கு மிக அண்மையில் சென்று தனது ஆய்வுப் பணியை மேற்கொண்டிருப்பது அது அனுப்பியுள்ள புகைப்படங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புகைப்படங்களை அவதானிக்கும் போது அதன் வளிமண்டலம் ஓட்டையாகியிருப்பதாக கருதப்படுவதுடன் மேற்படி கலம் செவ்வாயின் தரையில் மோதி அதன் உபகரணங்கள் சற்று சேதமடைந்திருப்பதால் புவியுடன் வெறெந்த தகவல்களையும் பரிமாறிக்கொள்ள முடியாதிருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இதேவேளை செவ்வாய்க்கிரகத்தில் முன்னர் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் இருக்கின்றனவா, எதிர்காலத்தில் உயிரினங்கள் வாழ சாத்தியங்கள் காணப்படுகின்றனவா என்பது பற்றி ஆய்வுகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது இதற்காக இயந்திர விஞ்ஞான கூடம் ஒன்று (Robotic Laboratory) வடிவமைக்கப்படவுள்ளது.







கடந்த 2003 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் திகதியும் 45 மில்லியன் பவுண் செலவில் "இசிடிஸ்பிளானிஷியா" என்று பெயரிடப்பட்ட விண்கலம் ஒன்று அனுப்பப்பட்டதாக தெரிவிக்கும் விஞ்ஞானிகள் அதற்கு என்ன நடந்தது என்பதைக் கண்டு பிடிக்க முடியாதுள்ளதாகவும் எந்த ஒரு சிதைவுகளையும் காணவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது அனுப்பப்பட்ட விண்கலம் அனுப்பியுள்ள புகைப்படங்கள் செவ்வாயின் மேற்பரப்பில் குழிகளும் மேடு பள்ளங்களும் இருப்பதைக் காட்டுகின்றன. அவையும் ஒன்றுக் கொன்று மாறுபட்ட வடிவத்தில் காணப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தப் பள்ளங்களும் குழிகளும் காணப்படுவதால் ஆய்வுக் கலம் அதனுள் விழுந்து எழுவதைப்போல் படங்கள் காணபடுவதால் அங்கு உயிரினங்கள் வாழ்ந்ததற்கான சாத்தியம் பற்றி ஆய்வு நடத்தி பிரித் தானிய விஞ்ஞானிகள் எதிர்கலத்திலும் இவ்வாறான ஆய்வுக்கலத்தை அனுப்பத்தீர்மானித்துள்ளனர். □

# நாய்சிரிக்கும் என்கிறார் — செல்லப் பிராணிகள் பற்றியஆராய்ச்சியாளர்

(ஸ்போகனே)

நாய்குரைக்க மட்டும் தான் செய்யுமா? இல்லவே இல்லை, நாய்சிரிக்கும் மன அழுத்தத்துடன் இருக்கும்போது,பாட்டுக் கேட்டால், அமைதியாக இரசிக்கும். நாம் விளையாடும் போது அதுவும் விளையாட நினைக்கும் என்கிறார் வளர்ப்புப் பிராணிகள் குணங்கள் பற்றி ஆராய்ச்சி செய்யும் பெண் ஆராய்ச்சியாளர்.

அமெரிக்காவில் நியூயோர்க் பல்கலைக்கழகம்சார்பில், பிராணிகள் சுற்றுச்சூழல் பற்றிய மாநாடு நடந்தது. அதில் பல ஆராய்ச்சியாளர்களும் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். வளர்ப்பு பிராணிகள் தொடர்பாக ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்ற பேட்ரிசியா சிமோனட் என்ற பெண்ணும் தன் ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்தார்.

இவர், அமெரிக்காவில், நியூயோர்க் அருகில் உள்ள ஸ்போகனே என்ற பகுதியில் பிராணிகள் பாதுகாப்பு சேவை மைய ஒருங்கிணைப்பாளராக உள்ளார். அவர் தன் ஆய்வுக் கட்டுரையில் வித்தியாசமான தகவல்களை, நாய்கள் பற்றிக்கூறியுள்ளார்.


நாய்களும் கிட்டத்தட்ட மனிதர்களைப் போன்ற சில உணர்வுகள் படைத்தவையே அவையும் காலை எழுந்ததும், மனிதர்களைப்போல அன்றாட பணிகளைச் செய்கின்றன. மனிதர்களைப் போலவே அவையும் மற்ற நாய்களை சந்தோஷப்படுத்த சிரிக்கும் வேதனையில் இருந்தால் நாம் பாட்டுக்கேட்பது போல அதுவும் பாட்டுக் கேட்டவுடன் அமைதியாக இரசிக்கும். இதை நான் பல முறை பரிசோதனை செய்திருக்கின்றேன்.

"நாய்களின் மன அழுத்த அளவை கணக்கிட்டுப் பார்க்கும்போது, இப்படிப்பட்ட முறைகளால் அதன் அழுத்தம் குறைவதையும் நாம் கண்டறியமுடிகிறது. நாய்களுக்கு முகாம்கள் அமைப்பது முக்கியம் தெருக்களில் அலைய விடக்கூடாது அப்படி முகாம்களில் வளர்த்தால் நாய்களின் குணம் வெகுவாக மாறிவிடும் அது குரைப்பதைக் கூட நிறுத்தி, மற்ற நாய்களுடன் சிரித்து விளையாடக்கூடச் செய்யும்'' என்றும் வித்தியாசமான தகவல்களை கூறினார்.

தன் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்போகனே பகுதியில் நாய்களுக்கு முகாம் அமைத்து அவற்றுக்கு எல்லா வசதியையும் ஏற்படுத்தினார். நாய்கள் விரும்பும் போது பாட்டு போடுவது விளையாடுவது போன்றவற்றை செய்யவும் சில பணியாட்களை நியமித்துள்ளார். இதில் நாய்களிடம் பெரும் மாற்றம் காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது என்றும் சிமோனட் கூறினார்.

# கப்பல் போக்குவரத்தை கவனிக்கும் செயற்கைக்கோள்

கடந்த ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்த பிரித்தானிய விஞ்ஞானியும் "Giove-A" என்ற விண்கலத்தை வடிவமைத்தவருமான பொறியியலாளர் டொம் பெயார்பெய்ன் என்பவருக்கு மரியாதை செலுத்தும் நோக்கில் பிரித்தானிய விஞ்ஞானிகள் அவரின் நினைவாக செயற்கைக் கோள் ஒன்றை விண்ணுக்கு அனுப்பி வைக்கவுள்ளனர்.



25 வயதான டொம்பெயார்பெய்ன் இறக்குமுன்பு கப்பற்போக்குவரத்தை கவனிக்கும் செயற்கைக்கோள் ஒன்றை நிர்மாணித்துக் கொண்டிருந்தார்.

எனினும் அவர் தனது பெற்றோருடன் விடுதலையைக் கழிக்க தாய்லாந்து சென்றிருந்தவேளை ஆழிப்பேரலையில் சிக்கி உயிரிழந்தார்.

அவர் வடிவமைத்த Giove-A என்ற பெயரில்Giove-B என்றுபெயரிட்டு மேற்படி செயற்கைக் கோள்வரும் 28 ஆம் திகதி கசகஸ்தான் சொயுஸ் விண்கலத்தில் ஏற்றப்படவுள்ளது. பின்னர் 2006 ஆம் ஆண்டு விண்ணுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இதை விண்ணுக்கு அனுப்புவதன் மூலம் 2015 ஆம் ஆண்டளவில் கப்பற்போக்குவரத்தில் ஈடுபடும் 400 மில்லியன் பேர் பயனடைவர். மற்றும் ஐரோப்பிய விண்வெளியூடிய கூலத்தினியல் தொகுதியில் ஒருலட்சம் பேர் வேலைவாய்ப்பைப் பெறுவர் மற்றும் செல்லிடத்தொலைபேசி பயன்பாட்டை பழக்கப்படுத்துநர்களும் பயனடையும். அத்துடன் நீண்டதூர பயணத்தின் போது வாகனமொன்று விபத்துக்குள்ளாகும்போது விபத்து நடந்த இடத்தை கண்டுபிடிக்க இந்த செயற்கைக் கோள் உதவிபுரியும்.

இதனுடைய வடிவமைப்புக்கான மொத்தச்செலவு மூன்று மில்லியன் யூரோவாகும்.


# தொடர்ச்சியாக கணினித்திரையை பார்ப்போரின் கண்கள் பாதிப்பு

தொடர்ச்சியாக கணினித் திரையில் பணியாற்று வோரின் கண்கள் பாதிப்பிற்குள்ளாவதாக அமெரிக்காவின் ஒகியோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ந்து கணினித்திரையில் பார்வையைச் செலுத்துவதால் கண் பகுதியிலுள்ள தசைத் தொகுதி இறுகுவதாகவும் இதனால் கண்வரட்சித்தன்மையை அடையும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கணினித்திரையின் பிரகாசத்தை தவிர்க்கும் பொருட்டு தொடர்ச்சியாக சாய்வாக பார்க்கும் போது விழிநரம்புகள் இறுகுவதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அத்துடன் கண்ணை இமைத்து விழிப்பதும் குறைவடைகிறது இது 15 முறையிலிருந்து 7.5 ஆக குறைவடைகிறது.

இதன் காரணமாக கணினித்திரையில் ஒரு கரும்புள்ளியை பின் சக்தியினால் உருவாக்கி அதனைப் பார்வையிடுமாறும் அதனால் கண் ணிமைக்கும் நேரம் அதிகரிக்கப்படலாம் என்றும் பரீட்சார்த்தமாக 10 பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



மனிதர்கள், பொருட்கள், கட்டடங்களை 24 மணிநேரமும் கண்காணிக்கக் கூடிய வகையில் உருவாக்கப்பட்ட றோபோ இதில் சக்திவாய்ந்த ஒளி ஒலி பதிவுக்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

# படையினரின் தாக்குதல்களுக்கு சுவிஸ்.இளையோர் அமைப்பு கண்டனம்

**(கொழும்பு)**

**தமிழர் தாயக பிரதேசங்களில் சிறிலங்கா படைகளாலும் அதன் ஒட்டுப்படைகளாலும் அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப் படும் கண்மூடித்தனமான தாக்குதல்களையும் செயற்பாடு களையும் புலம்பெயர்நாடுகளில் வாழும் இளைய சமுதாய மாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என சுவிஸ் இளை யோர் அமைப்பு தெரிவித்துள்ளது.**

புங்குடுதீவைச் சேர்ந்த செல்வி இளையதம்பி தர்சினி ஆகிய மாண வியை பாலியற்பலாத்காரத்தின் பின் கழுத்து நெரித்து கொலை செய்ததைக் கண்டித்து யாழ்.பல் கலைக்கழக மாணவர்களாலும் பேராசிரியர்களாலும் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட அமைதிவழிக் கண்டனப்பேரணி மீது சிறிலங்கா இராணுவம் தாக்கியும், துப்பாக்கி யால் சுட்டும் மிலேச்சத்தனமாக நடந்ததால் துணைவேந்தர், பேராசிரி யர்கள் மற்றும் பல மாணவர்களும் காயங்களுக்குள்ளானார்கள்.

இப்படியான சம்பவங்களை சிறிலங்கா அரசாங்கம் சர்வதேசத் துக்கு தொடர்ந்தும் இருட்டடிப்பு செய்து வருகின்றது. சிறிலங்கா அரச படைகளின் கண்மூடித்தனமான செயற்பாடுகளை சர்வதேச சமூ கங்கள் கண்டுகொள்ளாமல் இருப்பது எமக்கு வேதனை அளிக்கின்றது. நாமும் வாய்மூடி அமைதியாக இராமல் இப்படியான நடவடிக் கைகளை சர்வதேச சமூகத்துக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று புலமபெயர்வாழ் இளையோர் அமைப்புக்களையும் ஏனைய அமைப்புக்களையும் கேட்டுக் கொள் கின்றோமென அந்த அமைப்பு கூறி யுள்ளது.

# இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் பங்களிப்பு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்

### –ஜே.வி.பி. வலியுறுத்து

சிறிலங்காவின் இனப்பிரச்சினைதீர்வு தொடர்பில் இந்தியாவின் பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்க வேண்டும் என்று ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்னாயக்க வலியுறுத்தியுள்ளார். இலங்கை உள்ளகப் பிரச்சினைகளில் தேவையில்லாத வகையில் அந்நியர்கள் தலையிடுவது மட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத்திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே விமல் ரத்னாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# மகிந்தவுடன் தொண்டமானும் இந்தியா செல்கின்றார்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயணத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானும் பங்கேற்கவுள்ளதாக கூறப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை முதலில் ஆறுமுகன் தொண்டமான் நிராகரித்ததாகவும் இந் தியாவின் ஏற்பாட்டில் நடந்த மகிந்தவுடனான சந்திப்பின்போது ஒப்புக் கொண்ட தாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் விடுதலைப் புலிகளுடனான ஆலோசனைக்குப் பின்னரே மகிந்தவின் பயணத்தில் பங்கேற்பது தொடர்பான உத்தி யோக பூர்வ முடிவை ஆறுமுகன் தொண்ட மான் அறிவிப்பார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக் கின்றன.

# புங்குடுதீவு இளம்பெண் படுகொலைக்கு திருமலை தமிழ்மகளிர் பேரவை கண்டனம்

(திருகோணமலை)

புங்குடுதீவில் இளையதம்பி தர்சினி என்ற 20 வயது இளம் பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தை திரு கோணமலை மாவட்டத் தமிழ் மகளிர் பேரவை வன்மையாகக் கண்டித் துள்ளது. பேரவையின் தலைவி இ.கண்மணி இது தொடர்பான கண்டன அறிக்கையை வெளியிட் டிருக்கின்றார். இக் கொடூரமான கொலையை சர்வதேச சமூகமும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் ஏன் இதுவரை கண்டிக்கவில்லை என்றும் கண்டன அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. தமிழர் தாயகமெங்கும் சிறிலங்கா அரசினால் குவித்து வைக்கப்பட்டுள்ள முப்படைகளும் தமிழ் மக்கள் மற்றும் தமிழ்ப்பெண்களுக்கு எதிராக கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளன என்றும் புங்குடுதீவு அக்கிரமத்தை எதிர்த்தும் மனித உரிமை மீறல் செயல்களைக் கண்டித்தும் யுத்த நிறுத்தக் கண் காணிப்புக்குழுவிடம் முறை யிடச்சென்ற யாழ்.பல்கலைக் கழகச் சமூகம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மீது இராணுவத்தினர் சுட்டும் தாக்கியுமுள்ளனர். இவ்வெறி யாட்டத்தையும் கண்டிப்பதாகவும் மகளிர் பேரவையின் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை விடுதலைப் புலிகளை தடைசெய்யுமாறு கோரி கொழும்பில் நடத்தப்பட்ட ஊர்வலத் துக்கு பாதுகாப்பும் அனுமதியும் அரசு படை வழங்கியுள்ளது. இந்த சிறிலங்கா சிங்கள அரசின் இனவாத மேலாதிக்கத்தையும் இன ஒடுக்கு முறையையும் சர்வதேச சமூகமும் இலங்கையின் சமாதான நடவடிக் கைக்கான இணைத்தலைமை நாடுகளும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்றும் தமிழர் தாயகத்தில் குவிக்கப்பட்டுள்ள மேலதிக முப்படைகளையும் உடன டியாக அகற்றுமாறு அரசைக் கோரு வதாகவும் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (25)

# ஐ.தே.க.வில் பாரியமாற்றங்கள் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியில் எதிர்வரும் புதிய ஆண்டில் பாரிய மாற்றங்கள்செய்யப்படவுள்ளதாக அக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்க அறிவித்துள்ளார்.

கொழும்பில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ரணில் கட்சித்தலைவராகவும் பொதுச் செயலாளராகவும் எவரும் பொறுப்புக்கு வரலாம்.கட்சியின் தலைமையிடத்தில் உள்ள அதிகாரங்கள் கீழ் நிலைக்கு பகிர்ந் தளிக்கப்படும் என்றார் ரணில்.

இது தொடர்பில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோரிடம் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன என்றும் ரணில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியானது தேசிய, மாகாண, மாநகர அளவில் செயற்பட்டு வருகிறது. என்றும் கட்சி முடிவுகளில் இம்மூன்று அமைப் புக்களின் பிரதிநிதிகளும் சம நிலையில் பங்கேற்கும் வகையில் மாற்றங்கள்மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த மாற்றங்களையடுத்து தமது கட்சி நாட்டில் வலுவான அரசியல் சக்தியாக மாறும் என்றும் ரணில் நம்பிக்கை தெரிவித்தார்.

# தொண்டமான் அரசுடன் இணைந்தாலும் அவருக்கு அமைச்சுப் பதவி கிடையாது

### –அமைச்சர் சி.பி. ரத்நாயக்க

சிறிலங்கா அரசாங்கத்துடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இணைந்தாலும் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படமாட்டாது என்று தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் சி.பி. ரத்நாயக்க கூறியுள்ளதாவது, தொண்டமான் அன்று எங்கள் அரசாங் கத்துடன் இணைந்து கொண்டபோது எமது சிறுபான்மை அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காக அமைச்சுப் பொறுப்பை விட்டுக்கொடுத்து தியாகத்தைச் செய்தேன். ஆனால் இம்முறை அப்படி எதுவும் நடை பெறாது.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச் சின் கீழ் பெருமளவு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை இடை நடுவில் விட்டுச்செல்ல முடி யாது.

கடந்த பல வருடங்களாக இந்த அமைச்சில்பெருமளவு செலவுகள் செய்யப்பட்டுள்ளன. பல அரசாங் கங்களிலும் தொண்டமானே இந்த அமைச்சிற்குப் பொறுப்பாக இருந் துள்ளார். எனினும் மலையகத்திற்கு பெருமளவு சேவைகள் எதுவும் ஆற்றப்படவில்லை என்றார் ரத் நாயக்க.

ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்ற இ.தொ.கா.மத்திய மாகாண உறுப்பினர் கே.கோவிந்தராஜ் கூறி யதாவது, அரசாங்கத்தில் தொண்ட மானுக்கு இடமில்லை தோட்ட மக்கள் மத்தியில் போதியளவு செல்வாக்கும் இல்லை. அதனால் அவர் யாழ்ப் பாணத்தில் பொய்யான பலத்தை காண்பிக்க முயல்கிறார்.

அப்பாவி மலையக மக்களை எந்நாளும் லயன் அறைகளிலேயே வைப்பதேதொண்டமானின் தேவை யாகவுள்ளது. அதன் மூலம் அவர் அரசியல் செய்கிறார். பல ஆண்டு களாக தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்தும் அவர் மலை யக மக்களுக்கு எதனையும் செய்ய வில்லை என்றார்.

# பிக்குவின் சடலம் மீட்பு

சிலாபம் பகுதியிலுள்ள குளம் ஒன்றிலிருந்து புத்த பிக்கு ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப் பட்டுள்ளது. குறிப்பிட்ட புத்த பிக்கு அண்மையிலுள்ள விகாரை யொன்றில் வசித்தவர் என்று புத்தளம் பொலிஸ் அதிகாரி ரொசான் பெர்னாண்டோ தெரிவித்தார். பிரதேச வாசிகள் வழங்கிய தகவலுக்கு ஏற்ப சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிசார் கூறினர்.

இது தொடர்பான மரண விசாரணை நேற்று நடை பெற்றது என்றும் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை களை சிலாபம் பொலிசார் மேற் கொண்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# கேப்பாப்புலவு வீதி சீரின்மையால் போக்குவரத்தில் மக்கள் அவலம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவு வீதி சீரின்மையால் மக்கள் போக்குவரவு செய்வதில் பெரும் அவலங்களை எதிர் கொண்டுள்ளனர்.



புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவு வீதியிலுள்ள பிரதான பாலம் ஒன்று கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடிந்து முற்றாகப் போக்குவரவு தடைப்பட்டது. இதன் பின்னர் பக்கத்தில் தற்காலிகமாக சிறிய நீரோடிகள் வைத்து, தற்காலிக வீதி அமைக்கப்பட்டு போக்குவரவு இடம் பெற்றுவந்தது. இத்தற்காலிக போக்குவரத்து செய்யப்பட்ட வீதியானது மழைகாலத்தில் பொருத்தமற்றது எனத் தெரிந்திருந்தும்ஓர் தற்காலிக வேலைத் திட்டமாகவே அது அமைக்கப்பட்டது. இதன் பின்னர் கடந்த மாதம் பெய்த கனமழைகாரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் நீரோடிக்குமேல் போட்ட மண் அள்ளிச்செல்லப்பட்டு பேருந்து போக்குவரவு முற்றாகத் தடைப்பட்ட நிலைதொடர்கின்றது. மேலும் உந்துருளியில் செல்வது கூட பெரும் சிரமங்கள் கொண்டபயணமாகவே உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் புதுக்குடியிருப்பிலிருந்து பேருந்தில் கேப்பாப்புலவு வற்றாப்பளைக்குச் செல்லுகின்ற மக்களும், வற்றாப்பளை கேப்பாப்புலவுப் பகுதிகளி லிருந்து புதுக்குடியிருப்பு செல்லும் மக்களும் முல்லைத் தீவு சுற்றியே செல்லவேண்டிய ஓர்துர்ப்பாக்கிய நிலை யிலுள்ளனர்.

எனவே மக்களின் இந் நிலையை சம்பந்தப்பட்ட அனைவரும் கருத்தில் எடுக்க வேண்டியதன் தேவை யுள்ளது. அத்துடன் விரைவான செயற்பாட்டின் மூலம் மக்கள் தொடர்ந்தும் இவ் வீதியால் செல்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# மாற்றீடான வலுவுள்ளோர் சங்கம் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்)

மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 15 ஆண்டு நிறைவுவிழா நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் கருணா நிலைய கேட்போர் கூடத்தில் ம.அன்ரன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட வலுவிழந்தோரும் சிறப்பு விருந்தி னர்களும் மங்கலவாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு கருணா நிலை யத்தில் நிகழ்வுகள் ஆரம்பிக்கப் பட்டது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக் கேற்றல் இடம்பெற்றது. மங்கல விளக்கினை மாகாண ஆலோசகர் சகோதரி பெனறிற்றா, திருமதி பொன் தியாகம், வணபிதா சௌந் தரம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தேசியக்கொடியினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஏற்றிவைத்தார். அடுத்து மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் கொடி யினை சங்கத்தின் தலைவர் சிவமாறன் ஏற்றிவைத்தார். ஆரம்ப நிகழ்வு களைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகளாக வரவேற்புரை, தலைமையுரை, ஆசியுரை என்பன இடம்பெற்றன. உரைகளைத் தொட ர்ந்து அங்கத்தவர் கௌரவிப்பு, நடன நிகழ்வுகள் ஆண்டு நூல் வெளி யீடுகள் வலுவிழந் தோர்களுக்கான நினைவுப் பரிசில்கள் வழங்கல் போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றன. (தீ,கு)

# பண்டிகையை முன்னிட்டு விஷேட வெகுமதி

## என்றும் பயணத்தின் உதவியாளன்

# DAIDO

52,900.00

**CF 90C** 4 Gear இன் சிறப்புகள்
எரிபொருள் சிக்கனம்,
குறைந்தளவு தேய்மானம்,
கூடிய உத்தரவாதத்துடன்,
தேவையான அளவு உதிரிப்பாகங்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.





செரெண்டிப் மோட்டர் என்ரபிறைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
60 B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு - 10
தொலைபேசி: 0112-341580, 0112-341581
பக்ஸ் 0112-454608 E.mail-zme@slt.lk

(சி-13407)


## 21 ஆம் ஆண்டில் நெஞ்சில் நீங்கா நினைவில்...

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 10 - 06 - 1957 | | 24 - 12 - 1984 |



## லெப்டினன்ட் - காண்டீபன்

**சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா**

*(குமுளமுனை, முள்ளியவளை, முல்லைத்தீவு)*

*(யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவரும், அனைத்திலங்கை பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர் பேரவைத்தலைவரும் (1982 – 1983)*

மூ வேழு ஆண்டுகள் – நீ
உதிர்ந்து சென்றதடா
பார் மீது நீ நடந்த – தடங்கள்
உயிரோடு இருக்குதடா – பல்கலையில்
நீ எரித்த தீபங்கள்
சுடர் விட்டு எரியுதடா
வான் மீது நீ இருந்து – பார்த்திருக்க
தமிழ் இங்கு தலை – நிமிர்ந்து
நீக்குதடா – தலைவன்
வழித்துணையனே – பல்கலையின்
தலைவனே – ஊர்
தன்னின் புதல்வனே
உற்றாரின் உயிர் மூச்சே
உன் கல்லறை மீது தலை – சாய்ந்து
அஞ்சலிக்கிறோம் உன் நினைவுடன்.

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
ஆசை மருமக்கள், மக்கள்.

(6965)

## கிளிநொச்சி சேவாலங்கா நிறுவன சுனாமி அலுவலகத்தின் ஜீவனோபாயத் திட்டப் பிரிவில் பின்வரும் பதவிகளுக்கான நியமனங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன.

01. மீன் வள அபிவிருத்தி உத்தியோகத்தர்.(Fisheries officer)
கல்வித் தகைமை- Dip in Fisheries
விசேட தகைமை - அரச சார்பற்ற நிறுவனத்தில் குறைந்தது ஒரு வருட சேவை செய்த அனுபவம்

02 விவசாய உத்தியோகத்தர்- (Agricultural Officer)
கல்வித் தகைமை- விவசாயப் பட்டதாரி அல்லது விவசாய டிப்ளோமா சான்றிதழ்.
விசேட தகைமை -அரச சார்பற்ற நிறுவனத்தில் குறைந்தது ஒரு வருட சேவை செய்த அனுபவம்.

03. வெளிக்கள ஒருங்கிணைப்பாளர் -( Field Cordinator)
கல்வித் தகைமை -க.பொ.த (உ/த)
விசேட தகைமை -அரச சார்பற்ற நிறுவனத்தில் குறைந்தது ஒரு வருட சேவை செய்த அனுபவம் கணினி அனுபவம்.

04. வெளிக்கள உத்தியோகத்தர்
கல்வித் தகைமை -க.பொ.த (உ/த)
விசேட தகைமை -அரச சார்பற்ற நிறுவனத்தில் குறைந்தது ஒரு வருடசேவைசெய்த அனுபவம்.

(கல்லாறு, மருதங்கேணி, சுப்பர் மடம், கொட்டடி மாதிரிக் கிராமம் தீர்த்தக்கரை ஆகிய பிரதேசங்களில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதனால் அப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்)

மேற்படி பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சேர வேண்டிய இறுதித் திகதி 31.12.2005. விண்ணப்பங்கள் திட்ட முகாமையாளருக்கு கடித மூலமாகவோ, பக்ஸ் மூலமாகவோ நேரடியாகவோ கிடைக்க வேண்டிய முகவரி .

சேவாலங்கா மன்றம்
சுனாமி திட்ட அலுவலகம்
இல.72 திருநகர்
கிளிநொச்சி
பக்ஸ்-021-2283957

முக்கிய குறிப்பு- 1,2,3 ஆம் நிலைகளுக்கு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்

(சி-13596)

## யாழ்ப்பாணம் - மாநகரசபை
## மீள் கேள்வி அறிவித்தல் - 2006

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான நடைபாதை அங்காடி (வீரசிங்க மண்டபத்திற்கு அருகில்) மீள்கேள்விக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அ) குத்தகைக்காலம் - 2006.01.01. - 2006.12.31

ஆ) ஆகக்குறைந்த கேள்வித் தொகை - ரூபா 10,00,000/=

இ) மீளளிக்கக்கூடிய கேள்விப்பணம் - ரூபா 5,000/=

ஈ) மீளளிக்க முடியாதவை கேள்விப் பத்திரப்பணம்(வற்வரி நீங்கலாக) - 300/=

உ) கேள்விப்படிவங்கள் யாவும் அலுவலகத்தில் நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ) கேள்விப்படிவங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி 27.12.2005ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை

எ) கேள்வி விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 27.12.2005ஆம் திகதி 2.00 மணி வரை

ஏ) கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும் இறுதித்திகதி 27.12.2005 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை

மேலும் தகவல்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி.வி.கே. சிவஞானம்,
ஆணையாளர்,
மாநகரசபை.

(சி-13614)

# காணிதொடர்பான முக்கிய அறிவித்தல்

01. ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ளடக்கப்பட்ட பிரதேசங்களில் அரச / பொதுத்தேவைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட அரச காணிகளை எவரும் அத்துமீறி பிடிக்காத வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிகளுக்குரிய நிறுவனம் / திணைக்களம் / சபை தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிக்குள் விளம்பரப்பலகை ஒன்றினை மக்கள் பார்வையிடக்கூடியதாக நாட்டி காணியை அடையாளப்படுத்திப் பாதுகாக்குமாறு வேண்டுகின்றோம்.

02. ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசகாணிகளை எவரும் அத்துமீறி கையகப்படுத்தியிருப்பின் அல்லது ஆட்சிப்படுத்தியிருப்பின் அக்காணிக்குரிய நிறுவனம்/ திணைக்களம் / சபை தமது காணி என்பதற்கான ஆதாரத்துடன் அக்காணி தொடர்பான தற்போதைய நிலையையும் பொறுப்பாளர் .காணிப்பகுதி, தமிழீழ நிர்வாகசேவை நடுவப்பணியகம் ,பாரதிபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

03. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள, அனுமதிப்பத்திரம் பெறாதுள்ள காணிகளை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இக்காணி ஒன்றினை விற்கவேண்டிய அத்தியாவசியதேவை ஒருவருக்கு ஏற்படின்,அவர் அம் மாவட்டத்திற்குரிய தமிழீழ நிர்வாகசேவை காணிப்பகுதியுடன் தொடர்புகொண்டு அதன் அனுமதியினைப் பெற்றபின்னரே விற்பனைசெய்தல் வேண்டும் இவ்அறிவித்தல் வெளியிடப்படும் நாளிலிருந்து அனுமதி பெறப்படாது காணிவிற்பனை செய்யப்பட்டால்,சம்பந்தப்பட்டவர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

காணிப்பகுதி,
தமிழீழ நிர்வாகசேவை,
நடுவப்பணியகம், கிளிநொச்சி.

(சி.13592)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 - 07 - 1976



உதிர்வு 26 - 12 - 2004

## சூசைப்பிள்ளை நேசநாயகம்

(அம்மா எரிபொருள் வாணிப உரிமையாளர்)

எம் பாசத்தின் குலவிளக்கே
நீர் எம்மைவிட்டு ஓர் ஆண்டுகள் சென்றாலும்
ஆறவில்லை உன் துயரம்
நீர் வருவாய் என வழி பார்த்துக் காத்திருந்தோம்
வந்ததடா செய்தி நீ ஆழிப்பேரலையால் அடிபட்டு
கடல் அன்னை மடியில் உயிர் துறந்தாய் என்று

உன்னை பத்து மாதம் சுமந்து பாசத்துடன் பெற்றெடுத்துச்
சீராட்டி தாலாட்டி செல்லமாக வளர்த்த அன்னையை
பாதியிலே பரிதவிக்கவிட்டு கடல் அன்னையை
அரவணைத்து சென்றாயோ மகனே உன் ஆத்மா
சாந்தி பெற ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

26.12.2005 திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு வர்த்தக சங்கத்தினர் உட்பட உறவினர்களையும் அழைக்கிறோம்.

*உன் பிரிவால் துயருறும்*
அம்மா றீற்றம்மா.சகோதரர்கள் தவம்,
அன்ரன், அண்ணிமார், சக்தி,மதுரா

தகவல்.
தாய் (சூ.றீற்றம்மா)

(6971)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
கணனிப் பயிற்சி நிலையம்
கிளிநொச்சிக் கிளை

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

**O/L 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!**

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை இலங்கை செஞ்சிலுவைச்சங்க கணினி பயிற்சி நிலையத்தில் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்.

**Junior Diploma In Computer Science**
*Duration:-03 Months*

**Diploma In office Management**
*Duration:-05 Months*

**Diploma In Desktop publishing**
*Duration:-05 Months*

**Diploma In Multimedia Graphics**
*Duration:-05 Months*

**Diploma In Hardware Engineering**
*Duration:-03 Months*

**Certificate course In Maya & 3DMax**
*Duration:-03 Months*

அனுமதிகள் மட்டுபடுத்தப்பட்டவை
விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
விண்ணப்ப முடிவுத்திகதி 31.12.2005

கணனிப்பிரிவு
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
கிளிநொச்சி

(6445)


# 31 ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 09 - 06 - 1940



இறப்பு 24 - 11 - 2005

## சின்னத்துரை கனகராசா


எமது முன்னைநாள் வர்த்தக சங்க செயலாளர் அமரர் சி.கனகராசா அவர்களின் இழப்பால் துயருற்று இருக்கும் குடும்பத்தார், உறவினர்கள், ஏனையவர்கள் அனைவருக்கும் முல்லை. பிரதேச வர்த்தக சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:-
நிர்வாகம்
முல்லைப்பிரதேச வர்த்தகர் சங்கம்
தண்ணீரூற்று முள்ளியவளை

(சி-13616)

# 16 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள் 13 ஆம் ஆண்டு

பிறப்பு 28 . 01 . 1965



இறப்பு 26 . 08 . 1989

## நாட்டுப்பற்றாளர்
## பொன்னுத்துரை முருகமூர்த்தி
## (ராசா)

தேசம் விடியவேண்டும் என்பதற்காக
பாசத்தைத் துறந்து சென்ற வீரமறவர்களே
எம் செல்வங்களே இனிய சகோதரர்களே
ஈழம் விரைவில் மலரும்
உங்கள் இலட்சியமும் வெல்லும்.

பிறப்பு 05 . 08 . 1966



வீரச்சாவு 24 . 12 . 1992

முல்லைத்தீவு கோட்ட சிறப்புப் பொறுப்பாளர்
## மேஜர் செங்கோலன்
## (செங்கோல் மாஸ்ரர்)
## பொன்னுத்துரை பாலமுருகேஸ்

உங்கள் நினைவுடன் வாழும்

"றெசி வாசா"
சங்கத்தார் வயல்
இயக்கச்சி.

(7169)

க.பொன்னுத்துரை குடும்பத்தினர்.

இன்றைய நவீன உலகின் சவாலை எதிர்கொள்ள..

## புத்தாண்டில் புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

மல்லாவி புதுக்குடியிருப்பு

## தமிழீழ மாணவர் அமைப்பினால்

புதிய தொகுதி கணினிக் கற்கை நெறி வகுப்புக்கள் ஆரம்பம்

**Microsoft Office**
கணினி அறிமுகம், பொதுவான அலுவலக செயற்பாடுகள் பற்றிய கணினிக் கற்கை நெறி
காலம் : 6 மாதம்
வகுப்புகள் : விரிவுரை, செயன்முறை

**Practical Course for Officers**
கணினி அறிமுகம், அலுவலக செயற்பாடுகள் பற்றிய அலுவலர்க்கான செயன்முறைக் கற்கை நெறி.
காலம் : 10 வாரம்
வகுப்புகள் : செயன்முறை (நேரடி)

**Kids Computer Program**
அடிப்படைக் கணினி அறிவுடன் கூடிய குழந்தைகளுக்கான விசேட கற்கை நெறி
காலம் : 3 மாதம்
வகுப்புகள் : செயன்முறை

**Computer Hardware Engineering**
கணினி வன்பொருட்களின் விளக்கம், கணினி உருவாக்கம், திருத்தம் தொடர்பான கல்வி.
காலம் : 3 மாதம்
வகுப்புகள் : விரிவுரை, செயன்முறை

**Professional Type Setting**
முறையான பூரணமான (கணினி) தட்டச்சுக்கலை பழகும் கல்வி
காலம் : 2 மாதம்
வகுப்புகள் : செயன்முறை

**Computer Type Setting**
முறையான (கணினித்) தட்டச்சு, ஆவணங்கள் தயாரிப்பு தொடர்பான விசேட கற்கை நெறி.
காலம் : 3 மாதம்
வகுப்புகள் : செயன்முறை

**Adobe Photoshop**
கிரா.:பிக்ஸ் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற விரும்புவோர்க்கான கணினி கற்கை நெறி.
காலம் : 3 மாதம்
வகுப்புகள் : விரிவுரை, செயன்முறை

**Adobe PageMaker**
நூல் வடிவமைப்புத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற விரும்புவோர்க்கான கற்கை நெறி.
காலம் : 3 மாதம்
வகுப்புகள் : விரிவுரை, செயன்முறை

குழந்தைகள், பாடசாலை மாணவர்கள், இளையோர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் அனைவருக்குமான தெரிவுகள்

- ☐ தவணைமுறைக் கட்டண வசதி
- ☐ விரிவான பாடக் குறிப்புகள்
- ☐ தமிழில் விரிவுரை வகுப்புகள்
- ☐ வகுப்புகளின் நேரத் தெரிவு வசதி

மேலதிக விபரங்களை பின்வரும் கணினி நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ICS கணினிப்பயிற்சி நிறுவனம்,
துணுக்காய் வீதி,
மல்லாவி,
(வன்னன் விளையாட்டு மைதானம் எதிரே)

ICS கணினிப்பயிற்சி நிறுவனம்,
தமிழீழ மாணவர் அமைப்பு,
புதுக்குடியிருப்பு.
(பேருந்து நிலையம் முன்பாக)

☐ விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படும்.
☐ பதிவுசெய்யப்படும் ஒழுங்கிலேயே மாணவர்கள் சேர்க்கப்படுவர்.

(7170)

## தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னி

### பொதுக் கூட்ட அழைப்பிதழ்

இடம்:- கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம்
காலம்:- 08-01-2006 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- காலை 10.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- அகவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- சபையின் கருத்துரை
- கடந்தகால கூட்டத்தின் தீர்மானம்ஆராய்தல்
- பிற விடயங்கள்
- நன்றியுரை

*தங்களைத் தவறாது வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*த.ஜெகதீஸ்வரன்*
*தலைவர்.*

(சி-13558)

*அ.விஜயபாலகிருஸ்ணன்,*
*செயலாளர்.*

## ஓராண்டு நினைவலைகள் - சுனாமி

கடந்த 2004.12.26ஆம் திகதி நடைபெற்ற சுனாமி அனர்த்தத்தின் ஓராண்டு நினைவுநாள் 2005.12.26ஆம் திகதியாகும். இதனை நினைவு கூரும் முகமாக சுனாமி அனர்த்தத்தில் இறந்தவர்களிற்காக ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் என்பவற்றில் 26ஆம் திகதியன்று தர்மகர்த்தாக்கள் அனைவரும் இணைந்து ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளை நிகழ்த்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-13652)

## சினிமாப்பாடல் தடை

*எமது பண்பாட்டுக்கொவ்வாதனவும் இளந்தலைமுறையினரைத் தவறான வழிக்கு இட்டுச்செல்லக் கூடியனவுமான திரைப்படப் பாடல்களைப் பயணியர் பேருந்துகளில் ஒலிபரப்புவதைத் தடுக்குமாறு எமது மக்களும், சமூக நலன் விரும்பிகளும் எமக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். எனவே அவ்வாறான திரைப்படப் பாடல்களைப் பயணியர் பேருந்துகளில் ஒலிபரப்புவது 2006. 01. 01 ஆம் நாளிலிருந்து தடைசெய்யப்படுகிறது. திரைப்படவெளியீட்டுப் பிரிவினால் தெரிவு செய்யப்பட்ட சிறந்த திரைப்படப் பாடல்களைக் கொண்ட ஒலிப்பதிவு நாடாக்கள் நேரக்கணிப்பாளர் பணிமனைகளில் 31. 12. 2005 ஆம் நாளிலிருந்து விற்பனை செய்யப்படவுள்ளன. அவற்றைப் பெற்று பேருந்துகளில் ஒலிபரப்புமாறு வேண்டுகின்றோம்.*

பொறுப்பாளர்,
நடுவப்பணிமனை,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி- 13600)

## பயணியர் போக்குவரவுப் பேருந்தின் நேர ஒழுங்கினைக் கடைப்பிடித்தல்

*பேருந்துப் போக்குவரவிற்கு வழங்கப்பட்ட நேர ஒழுங்கில் போக்குவரவுப் பணியை மேற்கொள்ளுமாறு பேருந்து உரிமையாளர், ஓட்டுநர், நடத்துநர் ஆகியோரை வேண்டுகிறோம்.*

*இந்நேர ஒழுங்கினைக் கருத்திலெடுக்காது செயற்படுவதால், பயணியர் தமது தேவையை நிறைவு செய்ய முடியாதுள்ளதுடன் பேருந்து உரிமையாளரிற் சிலர் கூடிய வருமானமும் சிலர் குறைந்த வருமானமும் பெற வழிவகுக்கிறது. பேருந்து உரிமையாளர் அனைவரும் நேர ஒழுங்கை கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

பொறுப்பாளர்,
நடுவப்பணிமனை,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி- 13651)

# முதலாம் ஆண்டு நினைவினில் கண்ணீர்ப்பூக்களை காணிக்கை ஆக்குகின்றோம்

**26 .12.2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட சுனாமியின்போது சாவடைந்த அனைவரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

மார்கழி இருபத்தியாறு சுனாமியின் நினைவுச்சுவடு
மனங்களில் கோரத்தாண்டவமாடிய கடல்க்கோள்
அனர்த்தம் நினைவினில் வரும்
கடலன்னை எங்கள் உறவுகளை அழித்த கோரம்
தந்தையை, தாயை இழந்த குழந்தைகள்
குழந்தைகளை, பிள்ளைகளை இழந்த பெற்றோர்
கணவர்களை இழந்த மனைவிகள்
மனைவிகளை இழந்த கணவன்மார்
ஒட்டுமொத்த உறவுகளை இழந்தோர்
உறவுகளை மகிழ்வோடு வரவேற்ற வீடுகள்
ஊர்கூடி கும்மாளமடித்த வீதிகள்
கைகூப்பி தொழுகின்ற தேவாலயங்கள்
நண்டுகள் நர்த்தனமிட்ட கடற்கரை மணல்
எல்லாமே காணாமல்ப்போய் ஒரு வருடமாயிற்று
ஆறவில்லை எம்மனது துடிக்கின்றோம்
கடலலையில் தேடுகின்றோம் உங்கள் முகங்களை
ஆற்றாது துடிக்கின்றோம் ஒருமுறை
வருவீர்களா? எம்மோடு உறவாட

எதிர்வரும் 26-12-2005 அன்று சுனாமியின் முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு சுனாமியினால் அழிந்த புனித இராயப்பர் ஆலயத்தில் நடைபெறும். அவ்விடத்தில் 200 அடி நினைவுப் பந்தல் அமைக்கப்பட்டு சுனாமியில் இறந்தவர்களின் படங்கள் வைக்கப்படும். அத்துடன் அன்றைய நாளில் இறந்த அனைவரின் நினைவாக வண்ணாங்குள மக்களினால் மதியபோசனமும் வழங்கப்படும். இந்த முதலாம் ஆண்டு நினைவினில் உற்றார், உறவினர், நண்பர்கள், எம் உயிரிலும் மேலான போராளிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வண்ணாங்குள**
**மக்கள்**
**முல்லைத்தீவு.**

(சி-13653)

# ஆழிப்பேரலை அனர்த்தத்தின் ஒருவருட நிறைவு நிகழ்வு



## அழைப்பிதழ்

முல்லைத்தீவு
26.12.2005

அன்புடையீர்.......................

26-12-2004 அன்று நிகழ்ந்த ஆழிப்பேரலை (சுனாமி)யின் கொடூர அழிவையும் அதனால் உயிர்நீத்த எம் உறவுகளையும் நினைவுகூரும் ஒருவருட நிறைவின் நிகழ்வு முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது.

இவ் அனர்த்தத்தில் சிதைந்து போன முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலயத்தில் இறந்தவர்களின் பெயர் பொறிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவாலயத்திலும், இறந்த எம் உறவுகள் நல்லடக்கம் செய்யப்பட்ட கற்பூர புல்வெளி (மாமூலை)யிலும் இந்நிகழ்வுகள் நடைபெறும்.

## நடை பெறவுள்ள நிகழ்வுகள்:—

| | | |
|---|---|---|
| காலை | 10.00 | க. கூ. ச சமாசத்தில் ஒன்று சேரல் |
| | 10.05 | நினைவாலய முன்றலில் ஒளி ஏற்றல் |
| | | தேசிய கொடியேற்றல் |
| | 10.15 | நினைவாலயம் திறந்து வைத்தல் |
| | 10.30 | ஆத்மசாந்தி சமய நிகழ்வுகள் |
| மதியம் | 12.00 | நிலையான மின்குமிழ் ஏற்றல் |
| | | இரங்கல் உரைகள் |
| | | நினைவு மலர்வெளியீடு |
| | 1.00 | திருவுருவ படங்களுக்கான அஞ்சலி, மதிய உணவு |
| மாலை | 3.30 | மாமூலை நோக்கி பேருந்துகள் புறப்படும் |
| | 4.00 | நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அஞ்சலி |
| | 6.00 | நிறைவு |

தாங்களும் இந்நிகழ்வில் கலந்து ஆத்ம சாந்திக்காக செபிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

எம் துயரில் கலந்து பலவிதத்தில்
உதவிய தங்களுக்கு
எம் நன்றிகள்

**பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன்**
**முல்லை மக்கள் சார்பாக**

(சி-13591)

## ஊக்கமருந்து பாவித்தார் டெனிஸ் வீரருக்கு 8 ஆண்டு தடை

ஆர்ஜென்டீனாவை சேர்ந்த டென்னிஸ் வீரர் மரியானோ பியூர்டாவுக்கு 8ஆண்டுகள் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஊக்கமருந்து உட்கொண்டு விளையாடியதற்காக அவருக்கு இத் தண்டனையை அளித்துள்ளது சர்வதேச டெனிஸ்சம்மேளனம்.

கடந்த யூனில் நடைபெற்ற பிரெஞ்ச் ஓபன் போட்டியில் ரபேல் நாடலிடம் இறுதிச் சுற்றில் தோற்றுப்போனோர் 27 வயதாகும் மரியானோ பியூர்டா. போட்டி முடிவுற்றதும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட சிறுநீர் பரிசோதனையில் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தை பயன்படுத்தியுள்ளது தெரியவந்துள்ளது. இரண்டாவது முறையாக அவர் ஊக்க மருந்து பிரச்சினையில் சிக்கியதால் அதிகமான தண்டனை வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கலந்துரையாடல்

கரைச்சிப் பிரதேச விளையாட்டுக்கழகங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை பத்து மணிக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் நடைபெறவிருப்பதால் தவறாது சமுகமளிக்குமாறு மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ரதன் கேட்டுள்ளார்.

## கரைதுறைப்பற்று தெரிவு கால்பந்து போட்டி
## சென்யூட், விநாயகர், இளந்தென்றல் அணிகள் தகுதி

தாயக ரீதியில் நடைபெறவுள்ள மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்துப்போட்டியின் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட



முள்ளியவளை விநாயகர்



அளம்பில் இளந் தென்றல்

தெரிவுப்போட்டியில் முல்லைத்தீவு சென்யூட், முள்ளியவளை விநாயகர்,அளம்பில் இளந்தென்றல் அணிகள் தகுதி பெற்றன.

செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் கரைதுறைப்பற்று பிரதேசத்தை சேர்ந்த 16 கழகங்களின் அணிகள் பங்கேற்றன.

இதேவேளை முல்லைமாட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான தெரிவுப்போட்டி இன்றும் நாளையும் உதிக்கும் திசை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் என முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் சீ.நிலான் தெரிவித்தார்.



முல்லைத்தீவு சென்யூட்.

## சிறிலங்கா கிரிக்கெட் அணியில் மீண்டும் சனத்ஜெயசூரிய



சிறிலங்கா அணியில் ஜெயசூரிய மீண்டும் இடம்பிடித்துள்ளார். சிறிலங்கா கிரிக்கெட் அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் ஜெயசூரிய மோசமான துடுப்பாட்டம் காரணமாக இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நீக்கப்பட்டார். டெஸ்ட் தொடரில் சிறிலங்கா 2-0 என தோல்வியை தழுவியது. இதைத் தொடர்ந்து நியூசிலாந்து செல்லும் அணியில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார். சிறிலங்கா அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய பண்டார, மாலிங்க, முபாரக் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

தொடரில் சோபிக்காத சமரவீர நீக்கப்பட்டுள்ளார். முதல் ஒரு நாள் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் டிச.31இல் நடைபெறவுள்ளது.

## அகமதாபாத்திலும் இந்தியாவுக்கு அபாரவெற்றி
## டெஸ்ட்வெற்றி பெறும் சிறிலங்காவின் கனவு கலைந்தது

கும்ளே, ஹர்பஜன் சுழல் கூட்டணியின் அபார பந்து வீச்சினால், அகமதாபாத் டெஸ்டில் இந்திய அணி சிறிலங்காவை 259 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று வீடியோகான் கோப்பையை கைப்பற்றியது. இதன் மூலம் இந்திய மண்ணில், டெஸ்ட் வெற்றி பெற வேண்டும் என்ற சிறிலங்காவின் கனவு கலைந்தது.

இந்தியா சென்ற சிறிலங்கா அணி, மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் போட்டி மழையின் காரணமாக சமனில் முடிந்தது. டில்லியில் நடந்த இரண்டாவது போட்டியில் இந்தியா 188 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து மூன்றாவது டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் நடந்தது. முதல் இனிங்சில் இந்தியா 398, சிறிலங்கா 206 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இனிங்சில்





இந்தியா ஒன்பது விக்கெட் இழப்புக்கு 316 ஓட்டம் எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது. இறுதியில் 509 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றிபெறலாம் என்ற கடின இலக்குடன் இரண்டாவது இனிங்சை தொடங்கிய சிறிலங்கா அணி 249 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இத் தொடரில் சிறப்பாக செயற்பட்ட அனில்கும்ளே தொடர் நாயகன் விருதை தட்டிச் சென்றார்.

அகமதாபாத் டெஸ்ட் போட்டியின் இரண்டு இனிங்சிலும் சேர்த்து பத்து விக்கெட் வீழ்த்திய ஹர்பஜன்சிங் ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

## ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசை இந்தியாவுக்கு இரண்டாம் இடம்




சிறிலங்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றதன் மூலம் ஐ.சி.சி தரவரிசை பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.

அகமதாபாத்தில் நடந்த சிறிலங்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 259 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை 2.0 என்ற முன்னிலையில் கைப்பற்றியுள்ளது. இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) தரவரிசைப் பட்டியலில் மூன்றாவது .இடத் திலிருந்து 115 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. 113 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணி மூன்றாவது இடத்திற்கு பின் தங்கியுள்ளது. அவுஸ்திரேலிய அணி 128 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறது. சிறிலங்கா அணி 96 புள்ளிகளுடன் ஏழாவது இடத் தில் உள்ளது.

அவுஸ்திரேலியா 128, இந்தியா 115, இங்கிலாந்து 113, பாகிஸ்தான் 103, தென்னாபிரிக்கா 100, நியூசிலாந்து 100, சிறிலங்கா 96, மேற்கிந்தியத்தீவு 73, சிம்பாவே 27, பங்களாதேஷ் ஐந்து முதல் இடங்களில் உள்ளன.

## மரடோனா கைது பின் விடுதலை



கால்பந்து ஜாம்பவான் டயாகோ மரடோனா கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலையாகியுள்ளார். ஆர்ஜென்டீனா அணிக்கு 1986 இல் உலக கோப்பை பெற்றுக் கொடுத்தவர் மரடோனா. போதை மருந்துக்கு அடிமையான இவர் தற்போது அந்த பழக்கத்தில் இருந்து மீண்டு வருகிறார். இந்தச் சூழலில் கண்காட்சி நல நிதிப் போட்டியில் பங்கேற்பதற்காக மரடோனா பிரேசில் சென்றார். போட்டி முடிந்து தாயகம் திரும்புவதற்காக ரியோடி ஜெனிரோ விமானத்தைத்'தவறவிட்டதாலே' கடுமையாக ஆத்திரப்பட்டுள் ளார்.

விமான நிலைய ஊழியர்கள்,பொலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். பிரச்சினை பெரிதாகவே மரடோனா கைது செய்யப்பட்டார். இவர் போதை மருந்து ஏதாவது உட்கொண்டாரா என்பது பற்றி விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் இவர் விடுவிக்கப்பட்டார்.




## 10ஆம் ஆண்டு நிறைவு கால்பந்து போட்டி
## ஸ்கந்தா அணி சம்பியன்



திருநகர் விளையாட்டுக் கழகம் அதன் பத்தாம் ஆண்டு நிறைவையொட்டியும், பிரதேச மாவீரர்கள் நினைவாகவும் நடாத்திய அணிக்கு ஒன்பது பேர் கொண்ட கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் ஸ்கந்தபுரம் ஸ்கந்தா அணி சம்பியனானது.

நேற்றுமாலை திருநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உதயதாரகை அணியை 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தையும், பணப் பரிசையும் பெற்றுக்கொண்டது.

மேற்படி கோல்களை கிறிஸ்ரி, ரதீசன், புவனேஸ்வரன், நிரோஜன் ஆகியோர் போட்டனர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக உதயதாரகை அணியைச் சேர்ந்த கணேஷ் (தம்பி) தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக ஸ்கந்தா அணியின் சதீஸ்கண்ணா தெரிவானார். இத்தொடரின் சிறந்த அணியாக வளர்ந்து வரும் இளந்தளிர் அணியும், சிறந்த வளர்ந்து வரும் வீரராக மேற்படி அணியைச் சேர்ந்த கிருசாந்தும் தெரிவானார். இறுதி நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் கிளி. மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ரதன் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற இப்போட்டித் தொடரில் முல்லை மாவட்ட, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பல கழகங்கள் கலந்து கொண்டன.

நேற்றுக்காலை நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் விக்னேஸ்வரா ஏ அணியை எதிர்த்து ஸ்கந்தா அணியும், விக்னேஸ்வரா பி அணியை எதிர்த்து உதயதாரகை அணியும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.



வெற்றிக் கிண்ணத்துடன் ஸ்கந்தா அணி

## சிந்தனைக்கு



சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படுமென நான் என்றுமே நம்பியதில்லை; அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிடைக்கப்போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 24.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# உறுதி தர முடியுமா?

சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட முன்னர் இரு தரப்பினரிடம் இருந்தும் சில உறுதியான வாக்குறுதிகளைப் பெறுவதற்கு நோர்வேத் தரப்பு தீவிரமாக முற்படும் என்றும் இவ் வாக்குறுதிகள் பெறப்பட்டால் மட்டுமே நோர்வேத் தரப்பு சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் எனவும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு ஏற்ற விதத்தில் நோர்வேத் தரப்பில் இருந்து அதன் அபிவிருத்தி அமைச்சர் எரிக்சூல்ஹெய்ம் சிறிலங்காவின் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா விஜயம் செய்யவுள்ள வேளையில் இந்தியா செல்வதாகவும், அங்கு சிறிலங்காவின் சனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் கூறப்படுகின்றது.

நோர்வேத் தரப்பு சிறிலங்கா அரசிடமும் விடுதலைப்புலிகளிடமும், எத்தகைய நிபந்தனைகளை முன் வைக்கவுள்ளது என்பதை அனுமானத்தின் அடிப்படையில் கூறலாமே ஒழிய உறுதிபடத் தெரிவிக்க முடியாதுள்ளது. ஆனால் ஒன்று சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய உறுதி மொழிகளில் இருந்து விடுதலைப்புலிகளிடமிருந்து பெறப்பட வேண்டிய உறுதிமொழிகள் குறைவாகவே இருக்கும் என்பதும் அத்தகைய உறுதி மொழிகள் பெறப்படுவது கடினமாக இருக்கமாட்டாது எனவும் கருதுவதற்கு இடமுண்டு.

ஏனெனில் பேச்சுவார்த்தை மேசைக்கு செல்வதற்கு நிபந்தனைகளும், யுத்த நிறுத்தம் தொடர்பாக மாற்றங்களும் தேவை என சிறிலங்கா அரசாங்கமே கூறி வருகின்றது. அரசின் இக் கோரிக்கைகள் சில நிபந்தனையாகவும், சில யதார்த்தத்திற்கு மாறானவையாகவும் உள்ளன. ஆகையினால் பேச்சுவார்த்தை தொடர்பான உறுதி மொழிகளை அரசாங்கத்திடம் பெறுவதே அவசியமானதாக இருக்கும்.

எது எவ்வாறாயினும் நோர்வே அரசு விரும்பியவாறு அரசாங்கத்திடமோ அன்றி புலிகளிடமோ உறுதி மொழிகளைப் பெற்றுக் கொண்டு நேரடிப் பேச்சுவார்த்தைக்கு தனது ஒத்துழைப்பை வழங்கட்டும். இது நோர்வேத் தரப்பிற்கு உதவியாகவும் இருக்கக் கூடும்.

ஆனால் நோர்வேத் தரப்பு உறுதி மொழிகளின் அடிப்படையில் நேரடிப்பேச்சுக்களை நடத்துவதற்கு சம்மதிக்க வைப்பினும் அதற்கும் அப்பால் இரு தரப்பையும் இணக்கப்பாடு ஒன்றிற்கு வரவைப்பினும் கூட நோர்வே தரப்பிடம் தமிழ் மக்களிடம் இருந்து முன் வைக்கப்பட வேண்டியதொரு கோரிக்கையும் உள்ளது. அதாவது சிறிலங்கா அரசாங்கம் செய்து கொள்ளப்படும் உடன்பாட்டிற்கு ஏற்ப நடந்து கொள்ளுமா? அதாவது உடன்பாட்டை அமுலாக்கம் செய்வது தொடர்பாக நோர்வே அரசால் உறுதி மொழி எதையும் தர முடியுமா? என்பதே ஆகும்.

சிறிலங்கா அரசுடன் தமிழ் மக்களுக்கு நீண்டதொரு அனுபவம் உண்டாயினும், அதனை இங்கு தெரியப்படுத்தத் தேவையில்லை. நோர்வேத் தரப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இரண்டு உடன்பாடுகளுக்கு நேர்ந்துள்ள கதியே இங்கு சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

முதலாவதாக யுத்த நிறுத்த உடன்பாட்டைக் குறிப்பிட முடியும். இன்று யுத்த நிறுத்த உடன்பாடு கேள்விக்குறிகளாகும் நிலையை எட்டியுள்ளமைக்கு அரசாங்கத்தரப்பு இவ் உடன்பாட்டு விதிகள் பலவற்றை அமுல்படுத்தாததும் அவை அமுல் படுத்தப்படுவதற்கு போட்ட முட்டுக்கட்டைகளுமே காரணமாகும்.

அடுத்ததாக சுனாமி அனர்த்தத்தின் காரணமாக எழுந்த அவலத்தைப் போக்க நோர்வேயின் ஆலோசனை அடிப்படையில் இணக்கம் காணப்பட்ட பொதுக் கட்டமைப்பை சிறிலங்கா ஆட்சியாளர்கள் தூக்கி எறிந்து விட்டமையாகும். அதாவது இயற்கை அழிவால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்குக் கூட நீதியான முறையில் தீர்வு காண அரசாங்கம் தயாராக இல்லை என்பதாகும்.

ஆகையினால் தமிழ் மக்கள் நோர்வேயிடம் கோருவது பேச்சுவார்த்தைகளை நிபந்தனையுடன் ஆரம்பிப்பதுபோல் அமுலாக்கத்தையும், மேற்கொள்ள முடியுமா? என்பதே ஆகும். சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் போராட்டங்கள் எழுச்சி பெறும் போதும் இராணுவ ரீதியில் நெருக்கடிகளைச் சந்திக்கும் போதும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றிப் பேசுவது வழமையானதாகும். ஆனால், தீர்வு எதையும் அது எட்டுவதுமில்லை, எட்டினும் அமுல் செய்வதுமில்லை.

அத்தோடு இராணுவ ரீதியில் தமது நிலை மேலோங்குவதாகக் கருதும் வரையிலேயே சமாதானம் குறித்த அதனின் பேச்சு இருக்கும். பின்னர் ஒடுக்குமுறை வழிக்குத் திரும்பி விடுவார்கள். இத்தகைய அணுகுமுறையை அவர்கள் தமிழருடன் மட்டுமல்ல சர்வதேசத்துடனும் கைக்கொள்வார்கள் என்பதற்கு யுத்த நிறுத்த உடன்பாட்டு அமுலாக்கம், சுனாமி பொதுக் கட்டமைப்பு அமுலாக்கம் என்றவற்றில் நடந்து கொண்டுள்ள முறையே வெளிப்படுத்தப் போதுமானவையாகும்.

# மகிந்தவின் இனவாத நடவடிக்கைகளுக்கெதிராக அனைத்து சனநாயக சக்திகளும் அணிதிரள வேண்டும்

## - புதிய இடதுசாரி முன்னணி வேண்டுகோள்

(கொழும்பு)

மகிந்தவின் சிந்தனை என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் காட்டுமிராண்டித்தனமான இன வாத நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்று திரண்டு குரல் கொடுக்க வேண்டும் என்று புதிய இடதுசாரி முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக புதிய இடதுசாரி முன்னணி விடுத்துள்ள அறிக்கையில்,

மகிந்தவின் சிந்தனை இனவாதிகளின் விருப்பத்திற்கமையவே செயற்படுத்தப் பட்டிருப்பதை காணலாம். இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு வைத்துள்ள பெயர் அந்நியர் என்பதாகும்.

ஆட்சியாளர்களின் மனதில் என்ன உள்ளது என்பதை இதுவே சுட்டிக்காட்டுகின்றது

மேற்படி பெயர் குறிப்பிட்ட தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ள பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, தெஹிவளை ஆகிய இடங்களில் தமிழ் மக்களை சல்லடை போட்டுத்தேடியுள்ளனர்.

சனிக்கிழமை இரவு 11 மணி முதல் ஞாயிறு காலை 5 மணிவரை நடைபெற்ற இந்தத் தேடுதல் நடவடிக்கைகளில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஊடகவியலாளர்கள் கூட கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீண்டும் வடபகுதிகளில் பாலியல் வன்புணர்வு, கொலைகள் தொடர்கின்றன. புங்குடுதீவுப் பகுதியினைச் சேர்ந்த இளயதம்பி தர்சினி பாதுகாப்பு தரப்பினரின் காம இச்சைக்குப் பலியாகியுள்ளார். ஏற்கனவே கிருசாந்தி, ரஜினி, சாரதாம்பாள், கோணேஸ்வரி ஆகியோரின் பட்டியலில் தற்போது தர்சினியும் இணைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 20 வருடகால யுத்தத்திற்கு ஒரு சமாதான வழியை ஆட்சியாளர்கள் ஏற்படுத்தப் போகின்றார்களா? அல்லது இனவாதத்தின் இரத்த வெறி அவாவிற்கு நாட்டைப் பலி கொடுக்கப்போகின்றார்களா?

இத்தகைய காட்டுமிராண்டி தனங்களுக்கு எதிராக அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பல்கலை சூழலில் இராணுவ ஆக்கிரமிப்பை அகற்றாவிடில் மாணவர்கள் கொதித்தெழுவர்!

## -யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

(நல்லூர்)

இராணுவத்தினரின் அடாவடித் தனங்கள், பல்கலைகழக சுற்றாடலில் இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை நிறுத்தி அந்த இடத்தில் இருந்து அவர்கள் விலகாதுவிட்டால் மாணவர்கள் கொதித்தெழுவதை யாரும் கட்டுப்படுத்த முடியாத நிலையே ஏற்படும்

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் பல்கலை மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உபவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்களை சிறிலங்கா இராணுவத்தினர் தாக்கியுள்ளார்கள்.

இத்துடன் இலங்கை அரசினது உயர்கல்வி நிலையங்களில் ஆயுதங்களுடன் பொலிசாரோ அன்றி படையினரோ செல்லக்கூடாது என்ற விதிமுறையையும் மீறி பல்கலைக் கழகத்தினுள் புகுந்து விரிவுரையாளர் மற்றும் மாணவர்களையும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு கைது செய்துகொண்டு சென்றுள்ளார்கள்.

இந்நிலைமை பல்கலைகழகம் மீள ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் காணப்படுமாயிருந்தால் அந்நிலைமையை மாணவர்கள் அங்கீகரிக்கப் போவதில்லை. இங்கு யாழ். மாவட்ட மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாவட்ட மாணவர்களும் கல்வி கற்கின்றார்கள். அவர்கள் தங்குவதற்கு போதிய விடுதி வசதிகள் யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தில் இல்லை. இதன் காரணமாக அம் மாணவர்களில் பெரும்பான்மையான மாணவர்கள் பல்கலைகழக சுற்றாடலில் அமைந்துள்ள வீடுகளிலேயே தங்கு கின்றனர்

இராணுவத்தினர் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நெருக்கடி செய்வதுடன் அவர்கள் தங்கியுள்ள வீட்டின் உரிமையாளர்களும் இராணுவத்தினரின் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

இராணுவத்தினரின் இத்தகைய செயல்பாடுகளை நிறுத்திக்கொள்வதன் மூலமே மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

# சிறிய காட்டுப் பகுதிகளை வைத்துக்கொண்டு எமது தாயகம் என்கின்றனர் புலிகள்!

## - பாராளுமன்றத்தில் ஜே.வி.பி உறுப்பினர் விமல் ரத்நாயக்க

வடக்கு-கிழக்கில் சிறிய காட்டுப் பகுதிகளைப்பிடித்து வைத்துக் கொண்டு எமது தாயகம் என்கிறார்கள் விடுதலைப்புலிகள்என்று ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்க கூறியுள்ளார்.

சிறிலங்காப் பாராளுமன்றில விமல் ரத்நாயக்க பேசியதாவது:

புலிகள் குறித்தும்புலிகளின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் செயற்படும் நபர்களினதும் தவறான செயற்பாடுகள்,கருத்துக்களை அம்பலப்படுத்துவது வெளிவிவகார அமைச்சின் பெரும் பொறுப்பாகும்.

அண்மையில்பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத்திற்கு துணை போகும் நிதி வழங்குதலுக்கு எதிரான சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டியது அவசியமாகும்.

பிரான்சில் இருந்து பல இலட்சம் ரூபா புலிகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைத் தடுக்க உரிய வழிவகைகளைமுன்னெடுக்குமாறு, புதிய வெளிவிவகார அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

புலிகளுக்கு சர்வதேச பலம் என்பது அத்தியாவசியமாகவுள்ளது. இதனையே புதிய இராணுவத் தளபதியும் வலியுறுத்தியுள்ளார்.

எமது நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தியது பெரும் தவறாகும். தேவைக்கு அதிகமாகவே இந்த நிகழ்வு நடைபெற்றுவிட்டது.

சூடான், சைபிரஸ் போன்ற நாடுகளில் உள்நாட்டுப் பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளதால் ஏற்பட்ட விளைவுகளானது எமக்கும் சிறந்த படிப்பினையாகும்.

வடக்கு-கிழக்கில் இருக்கும் சிறிய காட்டுப் பகுதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு இதுதான் எமது தாயகம் என்று புலிகள் கூறுவதை சில சமாதானக் காகங்கள் பெரிதாக எடுத்துக்கொண்டு சர்வதேச ரீதியில் பெரும் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்தியக் கூட்டாட்சி முறையிலான அதிகாரப் பகிர்வு சிறிலங்காவுக்கு ஒருபோதும் பொருந்தாது. இந்த அதிகாரப் பகிர்வுமுறை இலங்கைக்கு ஏற்றது என்று பலரும் கூறுகின்றனர்.

உலகின் ஐந்தாவது பெரிய இராணுவப் பலத்தை இந்தியா கொண்டுள்ளது. பாரிய தேசபக்தி இயக்கத்தை அவர்கள் கட்டியெழுப்பியுள்ளனர். இந்தத் தகுதிகள் எதுவும் இலங்கைக்கு இல்லை.

இந்த நிலையில் இந்தியக் கூட்டாட்சி முறையை அவ்வாறே ஏற்றுக் கொள்வது அர்த்தமற்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலைப்புலிகளை தடைசெய்யும் நடவடிக்கைகளை புதிய வெளிவிவகார அமைச்சு முன்னுரிமையாக முன்னெடுத்தல் அவசியம் என்றார்.

# தற்போதைய சூழ்நிலைகள் தொடர்பாக
# த.தே.கூட்டமைப்பு இந்தியத் தூதருக்கு விளக்கம்

தற்போதைய நிலைமைகள் தொடர்பாக தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குக்குழு ஒன்று இலங்கைக்கான இந்தியத்தூதர் நிருபமாராவை நேற்றுச் சந்தித்து விளக்கியுள்ளது.

தற்போதைய யுத்த நிறுத்தத்தை நிலைத்து நிற்கச் செய்வது மற்றும் சமாதான நடைமுறையைத் தொடருவது ஆகியன குறித்து சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டதாக சந்திப்பின் பின்னர் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் தாமதிக்காமல் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதன் அவசியம் குறித்து இந்தியத்தூதருக்கு தமிழ்தேசியக்கூட்டமைப்பு வலியுறுத்தியதாகவும் சம்பந்தன் பத்திரிகை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியத் தூதருடன் அவரது அரசியல் செயலாளர் சமந்தீப்சிங்கில் சந்திப்பில் கலந்து கொண்டார். கூட்டமைப்புத்தூதுக்குழுவில் இரா.சம்பந்தனுடன், மாவை சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம், செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன் இடம் பெற்றிருந்தனர். (25)

# யாழ்.இல் தமிழர் மீதான வன்முறை குறித்து இந்தியப் பிரதமருக்கு வை.கோ மனு

## –நேரில் சந்தித்து கையளித்தார்

யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் மீதான சிறிலங்கா இராணுவத்தின் வன்முறைகள் அதிகரித்துள்ளது தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் தமிழ்நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ நேரில் மனு அளித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று மாலை 5.00 மணிக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கையும் பாதுகாப்பு அமைசசர் பிரணாப் முகர்ஜியையும் சந்தித்து ஈழத் தமிழர்கள் மீதான சிறிலங்கா இராணுவ ஒடுக்குமுறைகளையும் அண்மைய யாழ். வன்முறைகளையும் வைகோ விபரித்தார்.

வைகோ அளித்துள்ள மனு தொடர்பாக சென்னையில் ம.தி.மு.க. தலைமையகம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

17.12. 2005 அன்று யாழ்ப்பாணத்தில் மிகவும் அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்வாக தர்சினி என்ற இளம்பெண் சிறிலங்காக் கடற்படையினரால் சட்ட விரோதமாகக் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். கல்லோடு கட்டப்பட்டு நீரில் மூழ்கிய நிலையில் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா ஆயுதப் படையினரால் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ளேயும் வெளியேயும் பொது மக்களுக்கு எதிராக காட்டுமிராண்டித்தனமான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதை எதிர்த்து அங்குள்ள மாணவர்கள், பேராசிரியர்கள், யாழ்ப்பாண பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைமையில் சிறிலங்காப் போர் நிறுத்த கண்காணிப்புக்குழு என்ற அமைப்பிடம் மனு கொடுக்க ஊர்வலமாகச் சென்றனர். ஆனால் அவர்கள் சிறிலங்கா இராணுவத்தால் தடுக்கப்பட்டு பல்கலைக் கழகத் துணைவேந்தரும், பேராசிரியர்களும், மாணவர்களும் இரத்தம் கொட்டும் அளவுக்குத் தாக்கப்பட்டுள்ளார்கள். தாங்கள் எச்சரிக்கை செய்வதற்காக வானில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சிறிலங்கா இராணுவம் கூறினாலும் பேராசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் துப்பாக்கிச் சூட்டால் காயம் ஏற்பட்டுள்ளது என்பதை மருத்துவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இந்த நிகழ்வானது மிகவும் கவலையளிக்கக் கூடியது. பத்தாண்டுகளுக்குப் பிறகு சிறிலங்கா இராணுவம் யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழைந்து மாணவர்களை அச்சுறுத்தும் வகையில் அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

போர் நிறுத்தத்தை மீறிச் செயற்படும் சிறிலங்கா அரசு, இலங்கைத் தமிழர்கள் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் குற்றம் சுமத்தி வெளி உலகுக்கு ஒருதவறான தகவலை, தோற்றத்தை அளிக்க முற்படுகிறது.

போர் நிறுத்தம், அமைதிப் பேச்சுவார்த்தை ஆகியவை தொடர்பாக இலங்கையில் நிலவுகின்றன சூழல் கவலையளிப்பதாக உள்ளது. இந்தச் சூழ்நிலைகளில் சிறிலங்கா அரசு அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இந்தியாவை முன்னிறுத்த முயல்வது ஒரு தந்திரமான வியூகத்தின் செயற் பாடு ஆகும்.நோர்வே அரசு உண்மையாகவும் முழுமையான ஈடுபாட்டுடனும் அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறது. இத்தகைய பின்னணியில் இலங்கைத் தீவில் தமிழர்கள் படுகின்ற துன்பங்கள் துயரங்கள், தொடர்பாக நிலவுகிற கருத்துகளை பிரதம அமைச்சராகிய தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டுவர கடமைப்பட்டுள்ளேன் என்று அம்மனுவில் வைகோ தெரிவித்துள்ளார்.

# சிங்களப்படைகளின் வெறியாட்டத்தை ஆட்சேபித்து பளைப்பிரதேச மகளிர் அமைப்புக்கள் பேரணி

## போ.நி.க. குழுவிடம் மகஜர் கையளிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

சிறிலங்கா இராணுவமும் அவர்களுடன் இணைந்து செயற்படும் ஒட்டுப்படைகளும் இணைந்து குடாநாட்டில் பெண்களுக்கு எதிராக மேற்கொண்டு வரும் பாலியல் வல்லுறவுகள், படுகொலைகள் மற்றும் மக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்களைக்கண்டித்து பளைப்பிரதேச



மகளிர் அமைப்புக்களின் ஒன்றியத்தினால் இலங்கை போர்நிறுத்த கிளிநொச்சி மாவட்ட சர்வதேச கண்காணிப்புக்குழு பிரதிநிதியிடம் பளைப் பிரதேச மகளிர் அமைப்பு ஒன்றிய தலைவி ப.சுபாஜினியால் கண்டன மகஜர் கையளிக்கப்பட்டது.

இலங்கை சனாதிபதி மற்றும் ஐக்கிய நாட்டுப்பிரதிநிதிகளுக்கான மேற்படி மகஜரினை நேற்றுப் பகல் 1.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் முன்பாகவிருந்து ஊர்வலமாக கண்டன கோஷங்களை எழுப்பியவாறு வந்து பெண்கள் அமைப்புப்பிரதிநிதிகள் கிளிநொச்சி மாவட்ட சாவதேசகண்காணிப்புக்குழு பிரதிநிதியிடம் கையளித்தனர். மகஜரினைப் பெற்றுக் கொண்ட கண்காணிப்புக் குழு பிரதிநிதிசம்பந்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் வகையில் மகஜர்கள் உடன்கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்தார்.

மேற்படி பேரணியில் பளைப் பிரதேச மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து கொண்டனர். (சோ)

# பருத்தித்துறையில் சிப்பாய் காயம்

(வடமராட்சி)

பருத்தித்துறை மருதடிப்பகுதியில் நேற்றிரவு கைக்குண்டுத்தாக்குதலொன்று நடத்தப்பட்டுள்ளது.

ரோந்து சென்ற படையினர் மீது இரவு 8.15 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் ஒரு இராணுவச்சிப்பாய் காயமடைந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தம்மை பொங்கி எழும் மக்கள் படை எனத் தெரிவித்த சிலர் அப்பகுதியில் நின்றிருந்த மக்களை வெளிறேற்றிய பின் இத்தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (கா)

# ரோந்து அதிகரிப்பு

(வடமராட்சி)

யாழ்.வடமராட்சி பருத்தித்துறை முனைப்பகுதிக்கும் தொண்டமனாறுக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையின் ரோந்து நடவடிக்கை நேற்று அதிகாலை முதல் அதிகரித்துக்காணப்பட்டது.

இதனால் வடமராட்சிப்பகுதி கடற்தொழிலாளர்கள் கடலுக்குச்செல்ல அச்சம் தெரிவித்துள்ளனர். (கா)

# இராணுவ உளவாளி சுட்டுக்கொலை

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ உளவாளி ஒருவர் நேற்று நுவரெலியாவில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சயன் தனபால என்ற இராணுவ உளவாளியே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் நுவரெலியா பொலிஸ் நிலையத்தை நோக்கி சென்றபோதே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

# நடமாடும் சேவை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழபோக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் நடமாடும் சேவைகள் மூலம்இதுவரை தமிழீழ பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய மோட்டார் ஊர்திகளை பதிவுசெய்யும் நடவடிக்கையும் 2006ஆம் ஆண்டிற்கான வழங்கும் நடவடிக்கையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் எதிர்வரும்26ஆம் திகதியன்று நவ்வி,பாலமேட்டைப் பகுதிகளில் உள்ள மேற்படி ஊர்திகளுக்கான நடவடிக்கைகள் பாலமோட்டை போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு பிரதேச பணியகத்தில் நடைபெறவுள்ளதென தமிழீழமோட்டார் ஊர்திப்பதிவுப் பகுதியினர் தொிவித்துள்ளனர்.(சோ)

# கடிதம் அனுப்பிவைப்பு

உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி 31-12-96 வரை அதிபர் சேவையிலிருந்தவர்களுக்கு 01.01.1995 தொடக்கம் 31.12.1996 வரையான காலப்பகுதிக்கான சம்பளம் ஓய்வூதியம் பெற்ற அதிபர் உட்பட சகல அதிபர்களுக்கும் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தினால் மாற்றியமைத்த கடிதங்கள் சம்பந்தப்பட்ட அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. ஓய்வூதியம் பெற்ற அதிபர்களில் பலரின் முகவரி தெரியாததனால் அவர்கள் கடைசியாகக் கடமையாற்றிய பாடசாலைகளுக்கே கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனவே அக்கடிதத்தைப்பெற்றவுடன் சம்பளக் கொடுப்பனவுக்கான நடவடிக்கை எடுப்பதற்கு இக்காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிபர்களை துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்."

# இளம்பெண் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி- ஏறாவூர் எல்லை வீதியில் நேற்று முன்தினமிரவு இனந்தெரி யாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இளம் பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவத்தில் அவருடைய தந்தையார் காயமடைந்த நிலையில் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் கந்தாமி வள்ளிநாயகி (வயது-18) என்றும் காயமடைந்தவர் தம்பிராசா கந்தசாமி (வயது-51) என்றும்தெரிவிக்கப்படுகின்றது. வீட்டிற்கு வெளியே சந்தேகத்திற்கிடமான நபர்களின் நடமாட்டத்தை அவதானித்த தகப்பனும் மகளும் எட்டிப்பார்த்த வேளை இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

# புலிகளின் நிர்வாக செயலகம் படையினரால் எரிப்பு!

(மன்னார்)

மன்னார் நகரில் மூடப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் நிர்வாகச் செயலகம் சிறிலங்கா படையினரால் எரியூட்டப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை இச் செயலகத்திற்கு சென்ற படையினர் தீவைத்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

மன்னார் பள்ளிமுனைச் சம்பவத்திற்கு பழிவாங்கும் முகமாகவே இச் செயலகத்தை படையினர் தீயிட்டுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## பேசாலையில்..

மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 13 கடற்படையினர் அநுராதபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட கடற்படையினர் குறித்த சரியான எண்ணிக்கை இன்னமும் கிடைக்கவில்லை. 12 சடலங்களை மீட்டுள்ளோம்" என்று சிறிலங்காகடற்படையின் பேச்சாளர் கொமடோர்ஜயந்தபெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சண்டை நடந்த பகுதிக்கு அருகாமையில் தான் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத்சமரசிங்க கூறுகையில் "சம்பவ இடத்தில் மீட்புப்பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். என்ன நடந்தது என்பதை அறிவதில் தற்போது கடினமாக உள்ளது. இருப்பினும் அங்கு இரு குண்டுத் தாக்குதல்கள் நடந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதை புலிகள் தான் செய்துள்ளனர். அவர்கள் மட்டு தான் இத்தகையவற்றைச் செய்வார்கள்" என்று பிரசாத் சமரசிங்க கூறினார்.

இருப்பினும் பலியானோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடும் என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தின் போது பேருந்திலும் இராணுவ வாகனத்திலும் சுமார் 30 கடற்படையினர் இருந்ததாகவும், பேருந்து முற்றாகத்தீப்பிடித்துள்ளதாகவும் இராணுவ வாகனத்துக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## மாணவன்...

களைச் சோதனையிட்டுக் கொண்டிருந்த படையினர் மாணவன் ஒருவரைத் தாக்க முயன்றுள்ளனர். அப்போது அவர் தன்னை ஹாட்லிக் கல்லூரி மாணவன் என இனங்காட்டியபோது அவரை தாக்கியுள்ளனர்.

இதேவேளை, நெல்லியடிச் சந்தியில் நின்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் பத்திரிகைச் செய்தியாளர் ஒருவரைத் தாக்கியுள்ளனர். (கா)

# மன்னார் பொங்கியெழும் மக்கள் படைக்கு யாழ்.மக்கள் படை நன்றி தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் பொங்கி எழும் மக்கள்படைக்கு யாழ்.மாவட்ட மக்கள் படைநன்றி தெரிவித்துள்ளது.

17.12.2005 அன்று யாழ்.புங்குடுதீவில் இளம் தமிழ்பெண்ணாகிய இளையதம்பி தர்சினியை சிறிலங்காக் கடற்படையினர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்த சம்பவத்தைக் கண்டித்து, இவ்வாறான கொடூரங்களை இனிமேலும் செய்யக்கூடாது என்பதற்கு எச்சரிக்கையாக மன்னார் பேசாலையில் தாக்குதலை நடாத்தி கடற்படையினருக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியமைக்காக மன்னார் பொங்கியெழும் மக்கள்படைக்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்ளுகிறோம் எனத் தெரிவித்துள்ளது

## கைக்குண்டு..

டுள்ளனர். ஜோகராஜான்- புஸ்பமலர் (வயது-38) மற்றும் சின்னத்தம்பி- ராஜதுரை(வயது-63) ஆகிய இருவருமே காயமடைந்து சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (33)

# சடலம் மீட்பு

மட்டக்களப்பு சின்ன ஊறணிப் பகுதியில் அடையாளம் காணப்படாத சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. சின்ன ஊறணி காட்டுப் புறத்தில் கைகள், கால்கள் கட்டப்பட்டு நிலத்தில் புதையுண்ட நிலையில் இச்சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கண்டெடுக்கப்பட்ட இச் சடலம் 35 வயது தொடக்கம் 40 வரையான வயது மதிக்கத்தக்க சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவரது சடலமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.